அந்த இரண்டாம் கற்பனை

எஸ். பொன் ரத்தினம்.

THANKS TO OUR ALMIGHTY GOD. MAY GOD BLESS YOU AND MAY HOLY SPIRIT LEAD YOU

To the Readers

Dear Beloved Brother/Sister, Thank you for downloading this Ebook. Please note that this Ebook is copyrighted by the author of the book or the publisher of the book or as mentioned in the book. Word of God Ministries is just providing you this ebook as free of cost and it is for your personal use not for commercial purposes.

To the Copyright Owners

Dear Copyright owners, Word of God Ministries is doing this Free Ebook service to help the people who are not able to find the printed copy of your book from various countries arround the world and to the people who are restricted to have the printed materials in their house. And this will help the readers to improve their spiritual life.

If you want your new books to be published here as Free Ebook, kindly EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489

If you feel that your book should not be published, we are KINDLY REQUESTING YOU TO EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489. We will remove it from our Free Service as early as possible.

About Word of God Ministries

Word of God Ministries was founded in the year 2007, July 29th with the grace and leading of Almighty God by Bro. Yesudas Solomon as an interdenominational ministry. The popular ministry "**Word of God Team**" is one among our various ministries. Now this ministry has 10 branches such as **1)** Word of God Team, **2)** Mobile Ministry, **3)** Internet Ministry, **4)** Deaf Ministry, **5)** Blind Ministry, **6)** Tribal Ministry, **7)** Computer Ministry, **8)** Audio Ministry, **9)** Video Ministry and **10)** Printing Ministry. We all thank our God with full of our heart for using us in His Great Ministry. We need your continuous prayer support. Our vision is to "Reach the Unreached through Technology". Our websites are: www.WordOfGod.in, www.ChristiansMobile.com, www.FreeChristianEbooks.in, www.IndianBibles.net, www.ChristianAudioBooks.in, www.WordOfGodTeam.com, www.WordOfGodMinistry.in, www.KannadaBible.net, www.KannadaChristian.net, www.PrayForKarnataka.com

அந்த இரண்டாம் கற்பனை

[நாடகம்]

எஸ். பொன்ரத்தினம்

CLS

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்

Published by
THE CHRISTIAN LITERATURE SOCIETY
POST BOX 501, PARK TOWN, MADRAS 600 003

ANTHA ERANDAM KARPANAI

Play in Tamil

By S. PONRATHINAM

© The Author

First Published 1987

விலை ரூ. 12·00

Printed at The Diocesan Press, Madras 600 007.—B9156

நாடக ஆசிரியரின் முன்னுரை

இந்த நாடகம் 'அப்பத்தைப் பிட்டுக் கொடுங்க' என்ற தலைப்பில் முதல் முறையாக 1975ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ம் தேதி சென்னை மியூசியம் தியேட்டரில் நடைபெற்றது.

பின்னர் இந்த நாடகத்தை சற்று விரிவுபடுத்தி நாடகத்தின் பெயரை 'அந்த இரண்டாம் கற்பனை' என்று மாற்றி 1984ம் ஆண்டு ஜனுவரி மாதம் 22ம் தேதி இதை நான் சென்னை அம்பேத்கார் கலை அரங்கத்தில் நடத்தினேன்.

இந்த நாடகத்தில் வரும் நிகழ்ச்சிகள் அனைத்தும் ஒரு சி.எஸ்.ஐ. கோயில் முன் மண்டபத்தில் நடைபெறுகிறது. இடையிடையே திரை ஏற்றி இறக்கும் நிலை ஏற்படாதபடி ஒரே செட்டிங்ஸில் எல்லா காட்சிகளும் நடைபெறுகின்றன. நாடகத்தின் பிரதான பாத்திரம் கோயிலின் போதகர்.

எந்த அளவு கிறிஸ்தவர்கள் ஆண்டவரின் இரண்டாம் கற்பனையைக் கைக்கொள்ளுகிறார்கள்? கிறிஸ்தவர்கள் தன்னயமானவர்களாக மாறிப் போயிருக்கிறார்கள் அல்லவா? ஆண்டவரிடம் நன்மைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில்தானே அவரை அநேக கிறிஸ்தவர்கள் தேடுகிறார்கள்?

'ஆண்டவரை நேசி, அவருடைய சொற்படி நட' என்று முன்பெல்லாம் அருளப்பட்டு வந்த அருளுரைகள் எவ்வளவாக மாறிப் போயிருக்கிறது! இக்காலம் பொதுவாக அருளுரையாளர் தரும் அருளுரைகள் 'உன்னைப் பார். உன் மீட்பைக் குறித்துக் கவலைப்படு' என்ற முறையிலல்லவா இருக்கிறது.

முன்னர் அருளப்பட்டு வந்த அருளுரைகளில் ஆண்டவரின் இரண்டு கற்பனைகளும் அடங்கியிருப்பதைக் காணுங்கள்.

தற்காலம் அருளப்படும் அருளுரைகளில் இரண்டாம் கற்பனே அப்படியே விடப்பட்டிருப்பதைக் கவனியுங்கள்.

கிறிஸ்தவன், ஆண்டவரைப் பற்றிக்கொண்டிருப்பவன், ஏன் தன் மீட்பரைக் குறித்து அவன் கவலே கொள்ளவேண்டும்? 'உன்னைப் பார். உன் மீட்பரைக் குறித்து கவலே கொள்' என்றிராமல் 'ஆண்டவரை நேசி, அவர் சொற்படி நட' என்ற முறையில் அருளுரையாளர் தரும் அருளுரைகள் மாறினுல் எவ்வளவு நலமாயிருக்கும்!

சிந்தித்துப் பாருங்கள். ஆண்டவரே சொல்லுகிறுர்: தன் ஜீவனை இரட்சித்துக்கொள்ள விரும்புகிறவன் அதை இழந்து போவான் என்பதாக. மேலும் அவர் சொல்லுகிறுர்: நான் பசியாயிருந்தேன் ... தாகமாயிருந்தேன் . . . அந்நியனுயிருந்தேன்...வஸ்திரமில்லாதிருந்தேன்...வியாதியாயிருந்தேன்... காவலிலிருந்தேன்...

ஆண்டவரின் இரண்டாம் கற்பனையைக் கைக்கொள்ள கிறிஸ்தவர்கள் மறக்கலாமா?

ஒரு முக்கிய அறிவிப்பு

இந்த நாடகம் கிறிஸ்தவர்களுக்காக எழுதப்பட்ட நாடகம். இந்த நாடகத்தில் வரும் நிகழ்ச்சிகள் யாவும் என் கற்பனையில் உருவானவை. நாடகத்தில் வரும் கதா பாத்திரங்கள் அனைத்தும் கற்பனைப் பாத்திரங்கள். சொல்லப்படும் கருத்துக்கள் யாவும் என் சொந்தக் கருத்துக்கள். யாரையும் தாக்க வேண்டும், துக்கப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் இந்த நாடகத்தை நான் எழுதவில்லை.

கிறிஸ்தவர்களில் பெரும்பாலானவர்கள் ஆண்டவரின் இரண்டாம் கற்பனையைக் கைக்கொள்ள மனமின்றி சுயநல வாதிகளாக மாறிவிடுவார்களோ என அஞ்சி அவர்களை ஆண்டவர் காட்டும் பாதையில் சேர்ப்பிக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தில்தான் இந்த நாடகத்தை நான் உருவாக்கியிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சாயர்புரம் — எஸ். பொன்ரத்தினம்
18-8-87 — நாடக ஆசிரியர்

என் சகோதரி
திலகவதி கனகராஜிக்கு

இந்த நாடகத்தை சிரத்தையோடு படித்து ஆங்காங்கே சில திருத்தங்களுக்கான யோசனையைத் தந்துதவிய பேராசிரியர் த. மனோகரசிங் அவர்களுக்கு என் நன்றி.

எஸ். பொன்ரத்தினம்

22—1—84ல் சென்னை அம்பேத்கார் கலை அரங்கத்தில் தியேட்டர் கில்ட் குழுவினரால் இந்த நாடகம் நடிக்கப்பெற்றது.

போதகர் ஜாண்	ஓர் போதகர் (C.S.I. திருச்சபை)	—சந்திரபானு
செல்வின்	கோயிலின் அங்கத்தினர்	—T. K. வரதன்
நோவா	,, ,,	—மும்தாஜ்
மோசஸ்	,, ,,	—D. ஜீவானந்தம்
சஞ்சீவி	ஒரு தனிப்பட்ட கிறிஸ்தவக் கூட்டத்தைச் சேர்ந்தவர்	—D. வைத்தியநாதன்
ரூத்	போதகரின் மனைவி	—ரமா தேவி
மனோ	போதகரின் மகன்	—பாபு
சரோ	நோவாவின் மகள்	—ஷீலா
ஜோசப்	செக்ஸ்டன்	—ராஜு
மாலி	தோட்டக்காரர்	—B. மோகன்
அங்கத்தினர் 1	பாஸ்ரேட்	—K. ராமச்சந்திரன்
,, 2	கமிற்றி	—ராஜ்குமார்
,, 3	அங்கத்தினர்	—R. பழனி

(சம்பவங்கள் தொடர்ச்சியாக ஒரு சி. எஸ். ஐ. கோயில் மண்டபத்தில் நடைபெறுகிறது.)

தயாரித்து அளித்தவர் ப. சந்திரபானு

அந்த இரண்டாம் கற்பனை

அது தென் இந்திய திருச்சபையைச் சேர்ந்த ஒரு கோவில். தெரிவது முன் மண்டபமும் வெஸ்ட்ரியும், வெஸ்ட்ரிக்கு சன்னல்கள் இருக்கின்றன. மண்டபத்திலிருந்து கோயிலுக்குள் செல்லவும் ஒரு வாசல். அது கோயிலின் பிரதான வாசல். அது திறந்திருக்கிறது. திறந்திருக்கும் இந்த வாசல் வழியாக கோயிலின் உட்புறத்தை நாம் ஓரளவு காணமுடிகிறது. கோயிலின் ஆர்கனை யாரோ இசைத்துக்கொண்டிருக்கிறார்கள். அன்று ஓர் ஞாயிற்றுக்கிழமை. மாலை நேரம்.

[வெஸ்ட்ரியிலிருந்து ஒரு நாற்காலியோடு வரும் போதகர் ஜான், நாற்காலியை மண்டபத்தின் நடுவில் வைத்துவிட்டுப் பேச ஆரம்பிக்கிறார்.]

போதகர்: என் பெயர் ஜான்.

(அவருக்கு வயது 40 இருக்கும். வளர்த்திக்கேற்ற பருமன். மலர்ந்த முகம்.)

இது என் கோயில் (காட்டுகிறார்) நான் பணிபுரியும் கோயில். சமீபத்தில்தான் இங்கு மாற்றலாகி வந்திருக்கிறேன். இது ஒரு சி.எஸ்.ஐ. கோயில். சி.எஸ்.ஐ. கோயில்களில் இது ஒரு டிரெடிஷனல் சர்ச். வழிபாட்டு முறையிலிருந்து எல்லாக் காரியங்களும் இங்கு முறைதவறாமல் சம்பிரதாயப்படி நடந்தேறி வருகின்றன. (வெஸ்ட்ரியிலிருந்து ஒருவர் வருகிறார். அவர் கையிலும் ஒரு நாற்காலி இருக்கிறது).

இதோ வருகிறாரே இவர் (காட்டுகிறார்) இந்த கோயிலின் ஓர் முக்கிய அங்கத்தினர். இவர் பெயர் செல்வின். (செல்வின், தம்முடைய நாற்காலியைப் போதகரின் நாற்காலிக்கு வலது புறத்தில் வைக்கிறார். செல்வினுக்கு 50 வயதிருக்கும். விலை உயர்ந்த சூட் அணிந்திருக்கிறார்).

மிஸ்டர் செல்வின்! காலம் சென்றுகொண்டே இருக்கிறது. அது செல்லச் செல்ல சமுதாயத்தில் மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டே வருகின்றன. ஆனால் நம் கோயிலுந்தானிருக்கிறது. ஆதிமுதற்கொண்டு அங்கு யாதொரு மாற்றமுமில்லாமல் ஒரு கூட்டுக்குள் அடைபட்டு இயங்குவதுபோல் அது இயங்கி வருகிறது அல்லவா?

செல்வின்: சித்தாந்தம், சம்ரதாயங்கள், கோட்பாடு, நாம் வழிபடும் வழிபாட்டு முறை, இவை மாற்றத்துக்குரியவைகளா? அல்லவே.

போதகர்: நாம் ராக்கெட்டில் பறக்கலாம் ஆண்டவர் மட்டும் இன்னமும் கோவேறு கழுதையில்தான் ஏறி வரவேண்டும்; இப்படிச் சொல்லுகிறார்போல் இருக்கிறது உங்கள் கூற்று.

(செல்வின் பதில் சொல்லவில்லை. வெளியிலிருந்து மண்டபத்திற்கு வருகிறார் பிரதர் சஞ்சீவி. அவருக்கு 35 வயதிருக்கும். வேட்டியும் ஜிப்பாவும் அணிந்திருக்கிறார். அவர் கையில் ஒரு பைபிள் இருக்கிறது.)

இவர் பிரதர் சஞ்சீவி.

(சஞ்சீவியை அறிமுகப்படுத்துகிறார் போதகர்.)

சஞ்சீவி: எனக்கொரு நாற்காலியைக் கொண்டு வரேன்.

(வெஸ்ட்ரிக்குப் போகிறார் சஞ்சீவி.)

போதகர்: (செல்வினைப் பார்த்து) எனக்காக வருத்தப்படுகிறாராம் பிரதர் சஞ்சீவி. மோட்சத்தில் எனக்கு இடமில்லை என்று சொல்லி வருந்துகிறாராம். கேள்விப்பட்டேன்.

(ஒரு நாற்காலியைக் கொண்டு வருகிறார் சஞ்சீவி. அதை போதகரின் நாற்காலிக்கு இடது பக்கமாக வைக்கிறார்.)

பிரதர் சஞ்சீவி, எங்க சபையைச் சேர்ந்தவர் ஒரு சமயம், எங்களை விட்டுப் பிரிஞ்சு போயிற்றார். பிரிஞ்சு போய் ஒரு கூட்டத்தை ஆரம்பிச்சு அதை அவர் நடத்திக் கொண்டிருக்கிறார் இப்போது.

சஞ்சீவி: நானாகப் பிரிஞ்சி போனேனா, இல்லையே. தூய ஆவியானவர்தான் என்னை அழைச்சார். அழைச்சிட்டுப் போய் தனியாக ஒரு கூட்டத்தை ஆரம்பிக்கச் சொன்னார். இப்போதும் அவர் கிரியை செய்துகொண்டுதானிருக்கார். உங்க சபையில் சில நல்ல கிறிஸ்தவங்க இருக்காங்க, அவங்க உள்ளத்தில் அவர் கிரியை செய்துகொண்டிருக்கார். அவங்களையும் எங்களண்டை கொண்டுவந்திடுவார் கூடிய சீக்கிரத்தில்.

செல்வின்: அயோக்கியத்தனம்! அயோக்கியத்தனம்!

(சீறுகிறார் செல்வின்)

சஞ்சீவி: யாரிடம் இவர் ஆத்திரப்படுகிறார்? (தலையை அசைத்தபடி) தூய ஆவியானவரிடமா ஆத்திரப்படுகிறார்!

போதகர்: வீணாக, தூய ஆவியானவர் பெயரை இழுக்காதீங்க, பிரதர் சஞ்சீவி.

சஞ்சீவி: நானா? நான் ஒருபோதும் அவர் பெயரை வீணாகச் சொல்லமாட்டேன். அவர் என்னை ஆட்கொண்டிருக்கிறார். திடப்படுத்துகிறார். பரிசுத்தப்படுத்துகிறார். இந்த எக்ஸ்பீரியன்ஸ் எல்லாம் உங்களுக்கு இன்னும் கிடைக்கல்ல. இந்தக் கோயிலிலே செய்யும் ஜெபங்களும் கோயில் கூரைக்கு மேலே போறதும் இல்லை.

போதகர்: பாட்டும் ஜெபமும் மட்டும் போதுமா பிரதர் சஞ்சீவி. கிறிஸ்தவன் கிறிஸ்தவனாக அல்லவா வாழணும், அதுதானே முக்கியம்.

சஞ்சீவி: கிறிஸ்தவன் யார் அதைச் சொல்லுங்க. இரட்சிக்கப்பட்டவங்கதான் கிறிஸ்தவன்.

போதகர்: இந்த எண்ணந்தான் உங்க எல்லாருக்கும். உங்களைத் தவிர மற்றவங்க எல்லாம் பாவிகள் என்ற எண்ணம் உங்களுக்கு. சரி, எங்களை விட்டுப் பிரிஞ்சுதான் போனீங்க. போய் சமுதாயத்தைத் தூய்மைப்படுத்தக்கூடாதா? அதை பரிசுத்தப்படுத்தக்கூடாதா?

சஞ்சீவி: அந்தச் சமுதாயத்துக்குள்ளே எப்படி நாங்கள் போய் எங்களை கொடுத்துக்கொள்கிறது! அது எங்களைத் தீட்டுப்

படுத்தக்கூடாது. அதன் பாவங்களிலே நாங்கள் சிக்கி விடக்கூடாது. நாங்கள் பிரித்தெடுக்கப்பட்ட ஆசாரியக் கூட்டம். பரிசுத்தத்துக்கென்று பிரித்தெடுக்கப்பட்டிருக் கோம்.

போதகர்: இப்படித்தான் எஸ்கேப் ஆறீங்க உலகத்தைவிட்டு சமுதாயத்தை விட்டு.

சஞ்சீவி: நாங்க எஸ்கேப் ஆறோம். நீங்க? சமுதாயத்தின் ஆசாபாசத்திலே சிக்கியிருக்க ஆசைப்படுறீங்க அப்படித் தானே?

போதகர்: கிறிஸ்தவம், சமுதாயத்தை விட்டுப் பிரிந்ததல்ல, விலகினதல்ல.

சஞ்சீவி: போதியுங்க, போதியுங்க எல்லாரும் பாவம் செய்யுங்கன்னு போதியுங்க.

போதகர்: அப்படி நான் போதிக்கலையே. இதை நினைத்துப் பாருங்கள். ஆண்டவர் பரிசுத்தர். அப்படி இருந்தும் பாவிகளாகிய நம்மை விட்டு அவர் பிரிஞ்சு வாழவில்லையே. அவர் மட்டும் பிரிஞ்சு வாழ்ந்திருந்தால் அவரால் நமக்கு என்ன பயன் ஏற்பட்டிருக்கும்? ஒரு பயனும் ஏற்பட்டிராது.

சஞ்சீவி: அப்படியானால் பாவத்தோடு நாம் ஒப்புரவாக லாம்னு சொல்லுறீங்களா?

போதகர்: பாவத்துக்கு பயந்து ஒளியவேண்டாம். உலகத்தைவிட்டு எஸ்கேப் ஆகவேண்டாம் என்றுதான் சொல்லுகிறேன். வாழ்க்கை ஒரு பெரும் கடல். அதில் பயணம் செய்கிறோம். மற்றவர்களோடு சேர்ந்து பயணம் செய்கிறோம். மக்களோடு சேர்ந்து வாழும்போது இரு பெரும் சக்திகள் அங்கே உருவாகின்றன. ஒன்று சுயநலம், மற்றது அன்பு. எல்லாப் பாவங்களுக்கும் வேர் பாவம் அந்த வேரை அழிக்கக்கூடியது அன்பு. ஆண்டவர் அன்பின் சொரூபி. ஆண்டவர் நம்மோடு இருக்கிறார். நம் வாழ்க் கையில் அவர் இருக்கிறார். அவரில் நிலைத்திருந்தால் நாம் பாவத்தைக் கண்டு பயந்து ஓடவேண்டிய அவசியமே இல்லை.

சஞ்சீவி: ஒண்ணையொன்று சொல்லி இப்படிச் சமாதானம் சொல்றதிலே பிரயோஜனமில்லை. நமக்கு வேண்டியது ஒண்ணே ஒண்ணு. நம்ம ஆத்ம இரட்சிப்பு. நான் போன ஆண்டிற்கு முந்தின ஆண்டு, ஜனுவரி மாதம் 6 ஆம் தேதி, இந்தப் பாவ உலகத்திலிருந்து மீட்கப்பட்டவன். பிரேஸ் த லார்டு. இப்போ பாவக் கடலிலே பயணம் செய்கிற வனில்லை. ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம். பரத்திலே எனக்கு பங்கு இருக்கிறது. நீங்க மனந்திரும்பணும், இரட் சிக்கப்படணும், இல்லையேல் உங்களுக்குப் பரத்திலே பங்கு இருக்க முடியாது. பங்கு இருக்காது.

போதகர்: அதைப்பற்றி கவலைப்படவில்லை பிரதர் சஞ்சீவி. ஆண்டவர் பார்த்துக்கொள்வார் எல்லாவற்றையும்.

சஞ்சீவி: ஐயோ! என்ன நிர்ப்பந்தமான நிலைமை!

(தம்முடைய நாற்காலியில் உட்கார்ந்து பைபிளின் பக்கங்களைப் புரட்டி படிக்க ஆரம்பிக்கிறார். செல்வினும் தம்முடைய நாற்காலியில் அமர்கிறார். வெளியிலிருந்து மண்டபத்துக்கு வருகிறார் நோவா. அவர் வேட்டி அணிந் திருக்கிறார். நோவாவுக்கு வயது 50 இருக்கும்.)

போதகர்: வாங்க மிஸ்டர் நோவா. உங்க பேழையிலிருந்து வாரீங்களா?

நோவா: அந்த நோவாவுக்கு மூணு பேர் ஆம்புள்ளப் பசங்க. சேம், காம், யாப்பேத். ஆனால் இந்த நோவாவா கிய எனக்கு ஆம்புள்ள பசங்க இல்லையே. ஒரு பெண்தான் இருக்கா! ஆமா, சரோவுக்கும் வயசாகிட்டுப் போகுதே. இந்தக் கட்டையை நான் போடறதுக்குள்ளே ஒருத்தன் கையிலே அவளைப் பிடிச்சுக் கொடுத்துடணுமே நான்!

போதகர்: ஆமா, செய்யவேண்டியதுதான் (உற்சாகமாக) ஆனால் நான் கேட்டது உங்க பேழை, நீங்க அடிக்கடிப் போய்வந்துக்கிட்டிருந்தீங்களே, அந்தப் பேழை. அதைப் பற்றி கேட்கிறேன்.

நோவா: (சிரித்துக்கொண்டே) ஓ எஸ் சாராயக் கடையைச் சொல்றீங்க. அடைச்சுப் போட்டுட்டாங்களே. எனக்கு

ஒருவித இருமல். (இருமிக் காட்டுகிறார்) இது சாராயத்துக்குத்தான் கட்டுப்படுங்க. எங்க நேட்டிவ் டாக்டர் சொன்ன மருந்து அது எனக்கு. அந்த மனுஷனும் என்னடான்னு, இப்போ 85 வயசாகும் அவருக்கு இன்னமும் ஏதாவது சரக்கு எங்கேயாவது கிடைக்காதான்னு அலைகிறார்.

போதகர்: அப்போ கூடிய சீக்கிரம் அவர் பெயரை பேப்பர்லே பார்க்கலாந்தான் (சத்தமாக சிரிக்கிறார்.)

சஞ்சீவி: (எழுந்து நின்றபடி) இதென்ன சிரிப்பு, இதென்ன கேலிப் பேச்சு! போதகர்! அதுவும் இந்தக் கோயில் வாசல்ல!

போதகர்: ஆண்டவர் கூடத்தான் கேலிப் பேச்செல்லாம் பேசியிருந்திருப்பார்.

சஞ்சீவி: (நெஞ்சில் கை வைத்தவாறு) ஆ கர்த்தாவே!

செல்வின்: (எழுந்து நின்றபடி) இப்படித்தான் இல்லாததைச் சொல்லி வேதத்தைப் புரட்டுறாங்க இந்தக் காலத்திலே சி.எஸ்.ஐ. போதகர்மார்.

போதகர்: வேதத்தைப் புரட்டலையே. ஆண்டவர் விருந்துக்களுக்குப் போயிருந்ததாக வேதத்தில் இருக்கிறது. அங்கெல்லாம் 'உம்ன்னு சீரியசாக இருந்திருப்பாரா அவர்? கேலிப் பேச்செல்லாம் பேசியிருந்திருப்பார். நடனம்கூட ஆடியிருப்பார் மக்களோடு சேர்ந்து.

சஞ்சீவி: (தலையில் கை வைத்தவாறு) ஆ கர்த்தாவே! போதகர் பேசுற பேச்சா!

செல்வின்: கட்டுப்பாடில்லாமல் பேசினால் எதுவும் பேசலாம். கட்டுப்பாடில்லாமல் பேசக்கூடாது எங்க கோயில்ல ஆமா!

நோவா: செல்வின்! எங்க கோயிலைப்பற்றி என்ன சொல்றீங்க. எங்க குடியிருப்புக் கோயில்.

செல்வின்: அதுதான் கீழே விழுந்துட்டுதே.

நோவா: ஏன் கீழே விழுந்தது? நீங்க ரிப்பேர் பண்ணல்ல அதனாலதானே!

செல்வின்: நீங்க என்ன செய்தீங்களாம்?

நோவா: எங்க கையிலே பணமிருந்தால்தான் ரிப்பேர் செஞ்சிருப்போமே. பாஸ்ரேட் கமிற்றியைக் கேட்டோம். அவர்கள் எங்க கோயிலை ரிப்பேர் செய்யல்ல. ரிப்பேர் செய்ய எங்களுக்குப் பணமும் கொடுக்கல்ல.

செல்வின்: எல்லாம் நாங்கதான் செய்யணும். ரிப்பேர் செய்யணும். பணமும் கொடுக்கணும், எல்லாம் எங்க பொறுப்பா?

நோவா: இதுதானே தாய்க் கோயில். அடேயப்பா இது எவ்வளவு பெரிய பணக்காரக் கோயில்! இப்போகூட இந்தக் கோயிலே இருந்து ஒரு சின்ன கோயில் எங்களுக்குக் கட்டித்தரலாந்தான் நீங்கள்.

செல்வின்: என்னைக் கேட்டால் உங்களுக்கு கோயிலே அவசியமில்லை. உங்க சனங்கதான் இந்தக் கோயிலுக்கு வந்துக்கிட்டிருங்களே இப்போ. உங்க கோயில் இடத்தைக் கூட நல்ல விலைக்கு விற்றுடலாந்தான்.

போதகர்: அப்படியெல்லாம் சொல்லாதீங்க மிஸ்டர் செல்வின்.

செல்வின்: அதோ பாருங்க! அதோ போகிறாரே, அங்கே (தூரத்தில் போகும் ஒருவரைக் காட்டுகிறார் செல்வின்) யார்? என் மைத்துனர், மாணிக்க நகர் இன்டஸ்ரியலிஸ்ட். அவரைக் கேளுங்க நோவா, நிச்சயம் உங்களுக்குக் கோயில் கட்டித்தந்துடுவார் அல்லது அதற்கு ஏதாவது ஏற்பாடாவது செய்வார்.

நோவா: மோசஸ்தானே, ஆமா. அவர் செய்வாரே! நான் ஓடிப்போய் அவரைக் கூட்டியாறேன் (வெளியே விரைந்து செல்லுகிறார்).

செல்வின்: வழித் தெரியாத மனுஷன் என் அத்தான் மோசஸ். எல்லாரும் கார், பங்களான்னு வாழுறாங்க. இந்த

மனுஷனுக்கு என்ன வந்தது. மாணிக்க நகரிலே ஒரு சின்ன வீடு கட்டிக்கிட்டு அங்கே குடியிருக்கவும் போயிட்டாரே.

போதகர்: அங்குள்ளவர்களுக்கு இவர் மிகவும் உதவியாயிருக்கார் இல்லையா?

செல்வின்: இவர் என்ன வாழுறுர். வரும் லாபத்தில் பெரும் பகுதியை மற்றவர்களுக்குப் பிரிச்சுக் கொடுத்துட்டு இந்த மனுஷன் என்ன ஒரு ஏழை மாதிரிதானே வாழுகிறுர்.

(போதகர் மனைவி பாரீஷ் ஹாலை (Parish hall) நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறுர்.)

போதகர்: (கையசைக்கிறுர்) ரூத்! ரூத், இப்படி வா இங்கே மண்டபத்துக்கு! (மற்றவர்களிடம்) என் மனைவி ரூத் இருக்காளே அவளோட அப்பாவும் ஒரு போதகர், ஆனுல் அந்தக் காலத்துப் போதகர் சபைகளிலே இத்தனை பிரச்சினைகள் இல்லாத காலம். இப்போதான் போதகர்களுக்கு (சிரித்துக்கொண்டே) போதாத காலமாயிருக்கே.

(ரூத் வருகிறுள். அவளுக்கு வயது 35 இருக்கும். ரூத்தைத் தொடர்ந்து போதகரின் மகன் மனே வருகிறுன். அவனுக்கு வயது 7).

ரூத்: தாய்மார் கூட்டம் இன்னைக்கு பாரீஷ் ஹாலிலே நடக்குது. அதுதான் போய்க்கிட்டிருக்கேன்.

போதகர்: 5 மணிக்குத்தானே கூட்டம். இப்போ (கை கடிகாரத்தைப் பார்க்கிறுர்) 4·40 ஆகுது ரூத்! ஒரு சேஞ்ச் இருக்கட்டுமே இன்னைக்கு உங்க தாய்மார் கூட்டத்திலே. தாய்மார் நீங்க, பாட்டுப் பாடுங்க, பைபிள் வாசியுங்க, ஜெபம் செய்யுங்க, பிரசங்கம் பண்ணுங்க. கலந்து உரையாடல் எல்லாம் நடக்கட்டும். ஆனுல் பொதுவான ஒரு நோக்கு ... பார்வை ... அது இருக்குதே, அது மட்டும் இன்றைக்கு உங்க மனதிலே, நான், என் குடும்பம், என் சபை என்று உள் நோக்கியதாயிராமல், பிறர், பிறரின் நலம் இவ்வாறு வெளி நோக்கியதாயிருக்கட்டுமே.... என்ன சொல்ற? (மனேவைப் பார்த்து) வா, மனே!

(அவனே அணைத்துக்கொள்கிறுர்)

ரூத்துக்கு, இவன் ஒரு இஞ்சினியர், அல்லது டாக்டர் ஆகிடணும்னு ஆசை. எனக்கு ஆசை என்ன தெரியுமா? கிறிஸ்தவங்க அரசியலில் நுழையப்பயப்படுறுங்களே. இவன் ஏன் அரசியலில் நுழைந்து, மக்களுக்குச் சேவை செய்யக்கூடாது? இப்படி ஓர் ஆசை!

சஞ்சீவி: காலம் கெட்டுப் போச்சுது! கெட்டுப் போச்சுது! போதகரின் நினைவுகளையும் பாருங்கள் (தலையை அசைத்தபடி) அரசியலில் நுழையணுமாம் மகன் ...! உம் ...!

(நோவாவின் மகள் சரோ வருகிறுள்)

போதகர்: வா சரோ. இவள் நோவாவின் மகள். ரொம்ப சுறுசுறுப்பு. அவங்க வீட்டு வேலை அத்தனையும் இவளே கவனித்துக்கொள்கிறுள். நோவா வைத்திருக்கும் மாடுகளைப் பராமரிப்பது முதல், பாலை வினியோகம் பண்றது, கணக்கு வைத்துக்கொள்ளுவது எல்லாம் இவளே செய்கிறுள். பாராட்ட வேண்டும்.

சரோ: எல்லா வேலைகளையும் செய்துதானே ஆகவேண்டும், வேறு வழி? அதோ பாருங்கள் (காட்டுகிறுள்).

செக்ஸ்டனும், தோட்டக்காரர் மாலியும் வெளியே நின்றுக்கிட்டிருக்காங்க.

போதகர்: ஏன் வெளியே நிற்கிறுர்கள்? வா ஜோசப்! வாங்க மாலி! (கூப்பிடுகிறுர்).

(செக்ஸ்டன் ஜோசப்பும், தோட்டக்காரர் மாலியும் வருகிறுர்கள். ஜோசப்புக்கு 27 வயதிருக்கும், மாலிக்கு 50 வயது.)

போதகர்: (ஜோசப்பைக் காட்டியபடி) இவன் பெயர் ஜோசப். எங்க கோயில் செக்ஸ்டன். (மாலியைக் காட்டி) இவர் மாலி, எங்க தோட்டக்காரர், ஒரு தனிக்கட்டை இப்போ இவர். என்றுலும் . . .

செல்வின்: (முந்திக்கொண்டு) அவனுக்கும் திரும்ப ஒரு கலியாணம் இரண்டாந்தரம் ஒன்று, நாமாகச் செய்து வைக்கணும்னு சொல்ல வாறீங்களா?

போதகர்: அப்படியெல்லாம் இல்லை தனிக்கட்டை என்றாலும் இந்த விலைவாசி உயர்விலே நாம் கொடுக்கிற சம்பளம் ஒன்றும் கட்டலைன்னு சொல்லிக்கிட்டிருக்கார்ன்னு சொல்ல வாரேன் (ஜோசப்பைப் பார்த்து) சரி, ஜோசப் நீ போய் தாய்மார் கூட்டத்துக்கு அரேஞ்ஜ் பண்ணப்போ.

(ஜோசப் போகிறான்)

நீங்களும் போகலாம் மாலி, மனோ! நீ விளையாடப் போறீயா? மாலி கூட்டிற்று போங்க அவனை.

(மாலியும் மனோவும் தோட்டத்திற்கு போகிறார்கள்.)

ரூத்: சரோ! பாரீஷ் ஹாலுக்கு என்னோடே வாயேன். எனக்கு கொஞ்சம் உதவிசெய்யலாம் நீ வந்தால்.

சரோ: கோயிலுக்குள் போய் ஜெபம் பண்ணனும்ன்னு நினைச்சேன். என்னோட ஒரு கன்னுக்குட்டிக்கு சீக்கு. அதுக்கு சுகம் கிடைக்க வேண்டிக்கலாம்ன்னு போறேன்.

சஞ்சீவி: சீக்கா! எங்க கூட்டத்துக்கு வாங்க சிஸ்டர். உங்க கன்னுக்குட்டிக்கு நிச்சயமாக சுகம் கிடைக்கும். நீங்க வந்தால், அப்படியே யார் யாருக்கு சுகம் வேணுமோ அவங்கள்ளாம் எங்க கூட்டத்துக்கு வரலாம். வந்து சுகம் பெற்று திரும்பலாம். (போதகரைப் பார்த்து) பாஸ்டர்! இந்த வாரம் சுகம் அருளும் வரம் இருக்கே . . .

போதகர்: அதைப்பற்றித் தனியாகப்பேசலாமே நாம் பிறகு.

சஞ்சீவி: அதுவும் சரிதான். நாங்க எடுத்த படங்களையெல்லாம் உங்களுக்குக் காட்டணும், சுகம் கிடைச்சவங்களோட படங்கள். நாலு ஆல்பத்திலே ஒட்டி வச்சிருக்கோம். இப்போ நானுந்தான் போகணும். 5 மணிக்கு எங்களுக்கு ஒரு கூட்டம் இருக்குது, வாரேன்.

(போகிறார்)

ரூத்: (சரோவைப் பார்த்து) வா, போவோம், பாரீஷ் ஹாலுக்கு பிறகு நீ போய் கோயில்ல ஜெபம்பண்ணிக்க உன்னோட கன்னுக்குட்டிக்காக.

(இருவரும் பாரீஷ் ஹாலை நோக்கி நடக்கின்றனர்)

செல்வின்: கேள்விப்பட்டீங்களா, ஜோசப் பெயரும் சரோ பெயரும் அடிப்பட்டுக்கிட்டிருக்குது தெரியுமா உங்களுக்கு. கோயில் பெயர் கெட்டுப்போயிட வேண்டாம்.

போதகர்: ஏன் அப்படி சொல்றீங்க!

செல்வின்: செக்ஸ்டனுக்கு என்ன கேடு வந்தது. அவன் பாட்டுக்கு வேலையை பார்த்துட்டு போவானா. சரோ கிட்டபல்லைக் காட்றது, சிரிக்கிறது. எல்லாரும் கவனிச்சுக்கிட்டு தானிருக்காங்க.

போதகர்: மனதிலே களங்கமில்லாமல் பேசியிருக்கக் கூடாதா?

செல்வின்: அதெப்படி அவங்களுக்குள்ளே அண்டர்ஸ்டாண்டிங் இருக்குதே.

போதகர்: காதலன்னு சொல்ல வாரீங்களா.

செல்வின்: காதலாவது கத்தரிக்காயாவது. கலியாணம் பண்ணிக்க முடியாது. அது அவங்களுக்குத் தெரியும்.

போதகர்: ஜாதி வித்தியாசம்ன்னு சொல்றீங்களா. கலப்புத் திருமணம் நடக்கிறதில்லையா.

செல்வின்: என்னமோ இதெல்லாம் வேண்டாம். கூப்பிட்டு கண்டிச்சு வையுங்கள்.

போதகர்: அவங்க என்ன தவறு செஞ்சுட்டாங்க கண்டிக்கிறதுக்கு. மேலும் மற்றவங்களோட சொந்த காரியங்களிலே தலையிடுகிறதும் சரியில்லைதான்.

செல்வின்: அவங்க இரண்டுபேரும் எக்கேடு கெட்டுப்போனாலும் அதைப்பற்றி எங்களுக்கும் கவலையில்லைதான். கோயில் பெயர் மட்டுந்தான் கெட்டுப்போகக்கூடாது. உங்ககிட்ட விஷயத்தை சொல்லிற்றேன்; பார்த்துக்கங்க.

(கோயில் வாசல் வரை சென்றவர் திரும்பி வருகிறார்)

ஆல்டர் சுவர் எவ்வளவு மோசமாயிருக்கு பார்த்தீங்களா. வர்ணமெல்லாம் போயிருக்குது. வாங்க வந்து பாருங்க.

(செல்வின் கோயிலுக்குள் செல்லுகிறார். அவரைத் தொடர்ந்து செல்லாமல் மண்டபத்திற்கு வந்துகொண்டிருக்கும் மோசசையும் நோவாவையும் பார்த்துக்கொண்டு நிற்கிறார் போதகர். மோசசுக்கு 55 வயதிருக்கும்.)

போதகர்: மிஸ்டர் மோசஸ்! வாங்க! உங்களை ஓடிவந்து பிடிச்சுட்டாரே நோவா!

மோசஸ்: ஆமா, வேகமாகத்தான் ஓடி வந்திருக்கார். அவங்களோட கோயில் கட்டிடம் எல்லாம் கீழே சரிஞ்சுட்டுதாமே. விஷயமெல்லாம் சொன்னார்.

(செல்வின் வருகிறார்)

செல்வின்: (போதகரிடம்) இங்கேயே நின்னுட்டீங்களே! ஆல்டர் சுவர் வர்ணமெல்லாம் போய் எப்படி களையிழந்து தெரியுது! வாங்க, உடனே வந்து பாருங்க, வாங்க!

மோசஸ்: சுவரிலுள்ள வர்ணந்தானே செல்வின்.

செல்வின்: அதெப்படி சொல்றது ஆல்டர் எப்படிப்பட்ட இடம்! எவ்வளவு தூய்மையாக, அழகாக அதை வச்சிக்கணும். ஆல்டரைப் பார்த்தாலே நம்மை அறியாமல் நமக்கு ஒரு பயம் மனதிலே ஏற்பட வேண்டாம்? மனதிலே பக்தி உருவாக வேண்டாம்?

மோசஸ்: கிறிஸ்மசுக்கு கோயிலை வெள்ளையடிக்கப் போறீங்க. அப்போ வர்ணம் கொடுத்துடுங்களேன் ஆல்டருக்கு.

செல்வின்: ஆமா, கிறிஸ்மசுக்கு ஒரு மாதந்தானே இருக்குது! கிறிஸ்மஸ் அரேஜ்மெண்ட் கமிட்டியை இன்னும் ஏற்படுத்தக் காணோம்! போதகர் சும்மா இருக்கார் ஒன்றும் செய்யாமல்!

போதகர்: கிறிஸ்மஸ் பாட்டு பிராக்டீஸ் ஆரம்பமாயிட்டுது (மோசசிடம்) குயர் பிராக்டீசுக்கு வரல்லையே ஸ்டீபன்.

மோசஸ்: என்னமோ தெரியல்ல. ஸ்டீபனும் ஹில்டாவுமா ஏதோ ஒரு கான்சர்ட் நடத்தப்போறாங்களாம். கிடைக்கிற பணத்தைக்கொண்டு ஒரு பெரிய விருந்து ஏழைப் பிள்ளைகளுக்குக் கொடுக்கலாம்னு எண்ணியிருக்காங்களாம். அந்த மும்முரத்தில் குயர் பிராக்டீசை மறந்துட்டானோ என்னவோ. அவனுக்கு ஞாபகப்படுத்துறேன் குயர் பிராக்டீசை.

போதகர்: அப்புறம் (மோசேயையும் செல்வினையும் மாறி மாறி பார்த்தவாறு) ஸ்டீபன், ஹில்டா திருமணத்தை எப்போது நடத்தப்போறீங்க?

செல்வின்: அது நடக்கப்போறதாக எனக்குத் தெரியலையே.

போதகர்: என்ன அப்படி சொல்லிட்டீங்க! ஹில்டாவும், ஸ்டீபனும் முறைப்பெண், முறை மாப்பிள்ளை. ஒருவரை ஒருவர் விரும்புகிறார்கள். காதலிக்கிறார்கள். இது ஊர் அறிந்த விஷயம். அப்படியிருக்க!

செல்வின்: என்ன செய்றது சொல்லுங்க. ஸ்டீபன் நல்லவன் உத்தமன். தன் உயிரை மதிக்காமல் ஹில்டாவை அவன் மரணத்தினின்றும் காப்பாற்றியிருக்கான். என்றாலும் என்ன செய்றது? தன் தந்தையைப்போல் ஒரு ஏழையாக அல்லவா அவனும் வாழ நினைக்கிறான். ஹில்டாவுக்கு கார் இருக்கணும், பங்களா இருக்கணும், பெரிய சொசைட்டியிலே அவள் மூவ் பண்ணணும், அவளுடைய கணவன் ஒரு பணக்காரனாயிருக்கணும் அல்லது உயர்ந்த உத்தியோகமாவது பார்க்கணும், நிறைய சொத்து சுகத்தோடு அவள் வாழணும். அவள் ஸ்டீபனுக்கு வாழ்க்கைத் துணைவியாக அமையமுடியாது.

(கோயிலுக்குள் போகிறார்)

மோசஸ்: சரி பார்ப்போம், எத்தனை காலத்துக்குத்தான் செல்வின் மெட்டீரியலிசத்துக்கு அடிமையாயிருக்கப் போகிறான் பார்ப்போம். வாங்க நோவா உங்க குடியிருப்புக் கோயிலைப் பார்த்துட்டு வருவோம் வாங்க.

(மோசஸும் நோவாவும் வெளியே போகிறார்கள்)

போதகர்: இது கடைசிக் காலம். ஆண்டவரின் வருகையின் காலம். இப்போதையக் கிறிஸ்தவர்களின் மனப்போக்கை

எண்ணிப் பாருங்கள். அவர்கள் ஆட்டிட்டியூட் (attitude) எவ்வாறு இருக்கிறது? மெட்டீரியலிசத்தின்மீது கிறிஸ்தவர்களுக்கு மோகம். பணம், பதவி இதில் மோகம். மெட்டீரியலிசம், கிறிஸ்தவத்தின் எதிரி என்று அவர்கள் அறிந்திருந்தும் அவர்களுக்கு இந்த மோகம். ஒட்டகம் ஊசியின் காதில் நுழைந்துவிடும். ஆனால் ஐசுவரியவான் கடவுளின் ராஜ்ஜியத்தில் நுழைவதுதான் அரிது என்று ஆண்டவர் எச்சரித்தும் அவர்களுக்கு இந்த மோகம். அடுத்தபடியாக . . . தன்னை பின்பற்றுகிறவர்கள் அன்பைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்று ஆண்டவர் போதித்திருக்க எதிரிடையாக சுயநலத்தின்மீதுதானே கிறிஸ்தவர்களில் அநேகர் நாட்டம் கொண்டவர்களாயிருக்கிறார்கள். எல்லாம்தான், தனக்கு, தன் பிள்ளைக்கு தன் ஆன்ம இரட்சிப்புக்கு இப்படியாகத்தானே. சுயநலம்! சுயநலம்! ஆண்டவரின் இரண்டாம் கற்பனையை உண்மையாகக் கைக் கொள்ள எண்ணும் கிறிஸ்தவர்கள் எத்தனைபேர்தான் நமக்குள் இருக்கிறார்கள்? நூறு பேர்களில் ஒருவராவது உண்டா? சிந்தியுங்கள்.

—திரை—

2

கிறிஸ்மஸ் தினம். நேரம் காலை 5·45. கோயிலில் மின் விளக்குகளும், மண்டபத்தில் கலர் பல்புகளும் எரிந்துகொண்டிருக்கின்றன. மண்டபத்தின் அருகில் நட்டப்பட்டிருக்கும் கிறிஸ்மஸ் மரத்தில் பலூன்கள் தொங்கிக்கொண்டிருக்கின்றன. காற்றில் மிதந்து வருகிறது ஆர்கனில் இசைக்கப்படும் சில கிறிஸ்மஸ் பாட்டுகள்.

(போதகர் வெஸ்ட்ரீயிலிருந்து மண்டபத்திற்கு வருகிறார்)

போதகர்: இன்று கிறிஸ்து பிறந்த நாள்; கிறிஸ்மஸ். 'பூமியிலே சமாதானம் மனுஷர்மேல் பிரியம்' என்று அன்று பாடினர் விண்ணவர் அந்த முதல் கிறிஸ்மஸ் தினத்தன்று. இன்று நாங்களும் பாடினோம் எங்கள் கோயிலில் கிறிஸ்மஸ் கீதங்கள் பல. இதோ காலை ஆராதனையும் முடிந்துவிட்டது. சபையாரும் தங்கள் வீடுகளுக்குச் சென்றுவிட்டனர், அல்லது சென்றுகொண்டிருக்கின்றனர். நானும் புறப்பட்டுக்கொண்டிருக்கிறேன் வீட்டிற்கு . . . மணி இப்போது (கைக்கடிகாரத்தைப் பார்க்கிறார்) காலை 5·45.

(கோயிலிலிருந்து ரூத்தும் மனோவும் வருகிறார்கள். மனோவின் கையில் ஒரு பிளாஸ்டிக் பை இருக்கிறது.)

நீங்களும் வந்துவிட்டீங்களா ரூத்! ரொம்ப குளிராயிருக்கு இல்லையா . . . இப்போ மட்டும் ஒரு கப் காப்பி கிடைச்சால் . . .

ரூத்: புறப்படுங்க வீட்டுக்குப் போவோம்.

போதகர்: துணி டிஸ்ட்ரிபூஷனைப்பற்றி என்ன? தாய்மார் யார்ரெல்லாம் வாராங்க?

ரூத்: ஒருவரும் வரலையாம். போன வருஷம் போய் சங்கடப்பட்டது போதுமாம். சாக்கடைகளையும் குப்பை மேடுகளையும் கடந்து சேரிகளுக்குப்போறது அருவருப்பா இருக்காம்.

போதகர்: இந்த ஆண்டு சேரிகள் எவ்வளவோ சுத்தமாயிருக்குதே. அரசாங்கம் சேரி மக்களுக்கு வீடுகள் கட்டித் தந்திருக்கிறார்கள். ஆனால் கிறிஸ்தவர்கள் நாம் என்ன செஞ்சிருக்கோம் பிரமாதமாக. ஆண்டவர் நம்மைக் கேட்பாரல்லவா கேள்வி.

ரூத்: நம்ம டயோசிஸ் சமூகப் பணிபுரிகிறது. நம்ம கோயில் தொழுநோய் இல்லங்களுக்கு உதவுகிறது.

போதகர்: ஆமா. ஆனால் கிறிஸ்தவங்க தனிப்பட்டவங்க என்ன செய்றாங்க அதைச் சொல். எளியவனுக்குச் செய்வது தனக்குச் செய்வதாகும் என்று ஆண்டவர் சொல்லியிருக்காரே.

(வெளியிலிருந்து ஒரு துணி மூட்டையைத் தூக்கிக் கொண்டு வருகிறான் ஜோசப்.)

ஜோசப்: தனராஜ் ஐயா கொடுத்தாங்க இந்தத் துணிகளை டிஸ்ட்ரிபியூஷனுக்கு. கோயிலுக்கு வரும்போதே காரிலே கொண்டாந்துட்டாங்களாம்.

போதகர்: இன்னைக்கு அவர் வரலாமே, துணி டிஸ்ட்ரிபியூஷனுக்கு. நேரமிருக்குமே அவருக்கு.

ஜோசப்: ஏதோ பார்ட்டியாம், மனுசே அய்யா, பால்ராஜ் அய்யா அவங்களையும் கேட்டுட்டேன். அவங்களும் வரலையாம்.

ரூத்: நீங்க, உங்க செக்ஸ்டன், கார்டனர், இத்தனை பேரும் போங்க போதும். என்னைக் கூப்பிடாதேயுங்க. எனக்கு இன்னைக்கு நிறைய வேலை இருக்குது.

(கோயிலுக்குள்ளிருந்து சரோ வருகிறாள்.)

வா சரோ. வீட்டுக்குப் புறப்பட்டுட்டியா (சரோவின் புடைவையை பிடித்துப் பார்த்து) எங்க வாங்கின, டிசைன் நல்லா இருக்குது, துணியும் அழுத்தமாயிருக்கிறது.

சரோ: கே.சி. ஸ்டோரிலே வாங்கினேன் அம்மா.

மனோ: இதோ பாருங்க அக்கா! எவ்வளவு மத்தாப்பு வச்சிருக்கேன் தெரியுமா?

(தன் கையில் இருக்கும் பையைத் திறந்து காட்டுகிறான்.)

சரோ: அடே நிறைய வச்சிருக்கியே எனக்கு தரமாட்டாயா மனோ?

மனோ: (சரோவுடைய கம்மலைக் காட்டி) உங்க புது கம்மல் அவ்வளவு மின்னலையே அக்கா. என் பக்கத்தில் பிளாரன்ஸ் ஆன்டி இருந்தாங்க. அவங்க கம்மல் எப்படி மின்னுச்சுது தெரியுமா லைட்டிலே!

ரூத்: இதைத்தான் பார்த்துக்கிட்டிருந்தியா கோயில்ல.

மனோ: ஒவ்வொருத்தரும் என்னென்ன கலர் சாரி கட்டியிருக்காங்கன்னும் பார்த்தேன். எவ்வளவு கலர் தெரியுமா?

(கோயில் புத்தகங்களை கையில் ஏந்தியவாறு கோயிலுக்குள் இருந்து வந்த மாலி, புத்தகங்களை வெஸ்ட்ரியில் வைக்க வெஸ்ட்ரிக்குப் போகிறார்.)

ரூத்: இன்னைக்கு குயர் அழகாகப் பாடினாங்க. உங்க டோன் கூட நல்லா இருந்தது நீங்கள் ஜெபங்களைச் சொல்லும் போது.

போதகர்: அஞ்சுக்கு இரண்டு பழுதில்லைன்னு இருந்த தாக்கும். ஹில்டாவும் ஸ்டீபனும் துணி டிஸ்ட்ரிபூஷனுக்கு வருவார்கள் அழைச்சால். ஆனால் அவங்களுக்குத்தான் வர முடியாது. மோஸஸ் காம்பவுண்டிலே அவங்க இரண்டு பேருமே ஊரிலே உள்ள ஏழைப் பிள்ளைகளுக்கு விருந்து கொடுக்கிறாங்களே. ஜோசப்! கதவு சன்னல்களை அடைச்சுட்டு துணி டிஸ்ட்ரிபியூஷனுக்கு நீ தயாராகு. ஆமா, அனி அம்மா, வச்சுலா அம்மா இவங்களாம் சோஷியல் சர்விசிலே ஆர்வம் உள்ளவங்களாச்சே, அவங்க வரக் கூடுமே.

ஜோசப்: அவங்களும் வரலையாம். காலை 7 மணிக்கு பிரதர் சஞ்சீவி கூட்டத்துக்குப் போறாங்களாம்.

(மாலி, வெஸ்ட்ரியிலிருந்து மண்டபத்துக்கு வருகிறார்.)

மனோ: சரோ அக்கா! வாங்க மத்தாப்பு கொளுத்தலாம் வெளியிலே போய்.

ரூத்: சரோ நீ தனியாக வந்திருக்கியா?

சரோ: இல்லே. அப்பா வந்திருக்கிறார். (ஜோசப்பிடம்) கோயிலுக்குள்ளே போறீங்கதானே. அப்படியே அப்பா கிட்ட நான் மண்டபத்திலிருக்கேன்னு சொல்லிடுங்க.

(ஜோசப் கோயிலுக்குள் போகிறான்.)

ரூத்: சரோ, நீயும் சஞ்சீவி கூட்டத்துக்குப் போய்க்கிட்டிருக்கேயாமே.

சரோ: அங்கே எழுப்புதலாகத்தானிருக்கிறது. மேலும் அவர்கள் எல்லாரும் என்னோடு மிகவும் பாசத்தோடு பழகுகிறார்கள்.

மனோ: வாங்கக்கா, வாங்கம்மா நீங்களும். மத்தாப்பு கொளுத்துவோம் வாங்களேன்.

ரூத்: சரி வா!

(ரூத், சரோ, மனோ மூவரும் வெளியே போகிறார்கள், செல்வின் வருகிறார்.)

செல்வின்: அடேயப்பா நல்ல குளிர்! அடுத்த வருஷமாவது பாரீஷ் ஹாலில் ஒரு டீ ஸ்டால் வச்சுடணும்.

போதகர்: வீட்டிற்குப் புறப்படலேயா நீங்க?

செல்வின்: பண்டிகை அரேன்ஜ்மெண்ட் கமிட்டியிலே இருக்கேனே. மற்றவங்க பேருக்குத்தானே இருக்காங்க. இரவல் வாங்கின பூந்தொட்டிகள், சேர்கள் எல்லாம் போய்ச் சேரவேண்டிய இடத்தில் போய்ச் சேர வேண்டாமா?

போதகர்: செக்ஸ்டன் இருக்கான், கார்டனர் இருக்கார். இவங்களெல்லாம் பார்த்துக்கமாட்டாங்களா?

செல்வின்: காலம் கெட்டுப் போச்சே. ஆள் இருக்கணும் அப்போதான் ஒழுங்காக செய்வாங்க. என்ன வேலே பார்க்கிறுங்க? ஒண்ணும் சரியில்லே. இந்தா பாருங்களேன்.

(காட்டுகிறார்) எப்படி நட்டு வச்சிருக்கார் பார்த்தீங்களா நம்ம தோட்டக்காரர், மரங்களே எல்லாம் கோணலு மாணலுமா. தோட்டத்துக்குத்தான் ஒரு அமைப்பு இருக்கா. அடுத்த பாஸ்ட்ரேட் கமிட்டிற்கு நான் எலெக்ட் ஆயிடனும். பல திட்டங்கள் வைத்திருக்கிறேன். இந்த தோட்டத்தை அழிச்சிட்டு வேறு புதுசா அமைக்கணும் தோட்டம். இந்தக் கோயிலின் தோற்றமும் சரியாயில்லே. கோயிலே ரீமாடல் பண்ணி புதுப்பிக்கணும். காம்பவுண்டிலே எவ்வளவு இடம் இருக்குது பாருங்க வீணாக செக்ஸ்டன் வீட்டுப் பக்கத்திலே. அந்த இடத்திலே ஒரு நாலு மாடி கட்டிடம் கட்டி வாடகைக்கு விடணும். கோயிலுக்கு நல்ல வருமானம் வரட்டுமே.

போதகர்: செய்யவேண்டியதுதான். ஆனாலும் அதைக் காட்டிலும் செய்யவேண்டிய வேலே ஒண்ணு இருக்கே, முக்கியமான வேலே. இப்போ 20ஆம் நூற்றாண்டின் இறுதிக்கு வந்துட்டோம். மக்களின் மனப்பாங்கு எவ்வளவு தூரம் கெட்டிருக்கிறது. நாட்டில் எவ்வளவு அக்கிரமங்கள் நடக்கின்றன. சுயநலம் எவ்வளவாகத் தாண்டவமாடுகிறது. மக்களுக்குள் மக்களின் அன்பும் தணிந்து போயிருக்கிறது. கோயிலுக்கு கட்டிடம் கட்டுவதைக் காட்டிலும் மக்களேக் கட்டுவது மிகவும் தேவையாயிருக்கிறது. 21ஆம் நூற்றாண்டுக்கு மக்களே இப்போதே பக்குவப்படுத்த நாம் கடமைப்பட்டிருக்கோம் இல்லேயா?

(நோவா கோயிலுக்குள் இருந்து வருகிறார்.)

செல்வின்: நாமென்ன ஊரைக் கட்டமுடியுமா? எல்லாம் மக்களோட மனசையும் மாற்ற முடியுமா? கோயில் இருக்குது, ஆராதனே, கன்வென்ஷனெல்லாம் நடக்குது, ஜெபம் பண்ணுறோம், தான தர்மங்கள் செய்கிறோம். போதும். கோயில் கட்டிடத்தை ரீமாடல் பண்றது அது ஒரு முக்கியமான வேலேயாக எனக்குத் தோணுது.

நோவா: அப்படியே எங்க கோயிலுக்கும் ஒரு திட்டம் போட்டுடுங்களேன்.

செல்வின்: இனி அதைப்பற்றி பேசுறதிலே பிரயோஜனமில்லை. உங்க குடியிருப்பு சனங்கள் இந்தக் கோயிலுக்கு வந்துகிட்டிருக்கட்டும்.

நோவா: எல்லாராலேயும் வரமுடியலையே. வரமுடிஞ்சவங்களும் உங்க உயர்ந்த அந்தஸ்தை நினைச்சு சங்கடப்படுறாங்க.

செல்வின்: ஒரு குருப்பா அவங்களை கீழே ஒரு பக்கமாக உட்காரச் சொல்லுங்களேன்.

நோவா: அப்படி உட்கார்ந்தாலும் வேண்டாத ஒரு இடத்துக்கு வந்த மாதிரி தோணுதே அவர்களுக்கு. எனக்குக் கூட சங்கடமாப் போகுது சில சமயம். நவநாகரிகமான உயர்ரக ஆடைகளை அணிச்சுக்கிட்டு நீங்கள்ளாம் கோயிலுக்கு வரும்போது எப்படிங்க என்னைப்போல அந்தஸ்து உள்ளவங்க கோயிலுக்குள்ளே வந்து எவ்வளவு நேரத்துக்கு கூனிக் குறுகிக்கொண்டு உட்கார்ந்திருக்க முடியும்? இன்னைக்கு நான் வெளியிலேயே நின்றுட்டேன், வாசலண்டை. அப்போ என் அண்டை ஒருத்தர் வந்து நின்னார். அவரை இதற்குமுன் நம்ம கோயில்ல பார்த்ததில்லை. 'கோயில்ல இடமில்லைன்னு பார்க்கிறீங்களா. பண்டிகையாச்சே பண்டிகை கிறிஸ்தவங்களும் வந்திருக்காங்க நிறையப் பேர். அவங்களும் முண்டி அடிச்சுக்கிட்டு உள்ளே போய் உட்கார்ந்துட்டாங்களே, இடமில்லையே. ஆனால் அதோ பாருங்க ஒரு இடம், அந்த மூலையிலே காலியாயிருக்குது முந்துங்கள், பிடிச்சுக்கலாம்'ன்னேன் அவரண்டை காலியிருந்த இடத்தை சுட்டிக்காட்டியபடி: அவர் 'வேணும் உள்ளே நாடகம் நடக்குது, சனங்கள் உட்கார்ராங்க, எழும்புறாங்க, முட்டுப்போடுறாங்க, எல்லாருமா சேர்ந்து படிக்கிறாங்க, பாடுறாங்க நல்லா இருக்குது. ஆனால் எனக்குத்தான் அங்கே இடமில்லையே, எப்படி நான் உள்ளே போறது'ன்னார் பதிலுக்கு. அப்போ நான் சொன்னேன் அதோ பாருங்க கட்டிடம், அங்கே பிரதர் சஞ்சீவி கூட்டம் நடத்துகிறார், அங்கே ரொம்ப எழுப்புதலாக இருக்கிறதாக சொல்லிக்கிறாங்க, போய்ப் பார்க்கிறீங்களா?'ன்னு கேட்டேன். அவர், 'அங்கே போயிற்றுதானே வாரேன். அங்கே இரட்சிக்கப்பட்டவர்களுக்குத்தான் இடம், எனக்கு இடமில்லைன்னு சொல்லி அனுப்பிச்சாரங்க'ன்னார் வருத்தத்தோடு. நான் 'ஏன் வருத்தப்படுறீங்க நம்ம மனசுதான் கோயில், அங்கே ஆண்டவர் இல்லென்னு எந்தக் கோயிலிலேயும் நீங்க அவரைக் காணமுடியாது, எந்தக் கூட்டத்திலேயும் அவரைக் காணமுடியாது'ன்னு தேற்றினேன் அவரை. அவர், 'ஆனாலும் எனக்கு வருத்தமாகத்தானுங்க இருக்குது. சத்திரத்திலே எனக்கு இடமில்லைன்னு சொல்லிட்டாங்க. என்னோட சொந்தக்காரரும் எனக்கு இடந்தரலை; சரி மோசஸ் வீட்டிற்குப் போறேன்'னார். நான், 'மோசஸ் வீட்டுக்கா!'ன்னேன் திரும்பி பார்த்தபடி, ஆளைக் காணோம்! மறைந்துவிட்டார், தேடியும் பார்த்தேன், காணவே முடியல்ல!

செல்வின்: என்ன அழகான கிறிஸ்மஸ் கதை!

நோவா: கதையில்லை.

செல்வின்: இப்படிப்பட்ட ஒரு கதையை போதகர் உங்களுக்குச் சொல்லியிருக்கணும். நீங்கள் அதைக் கொஞ்சம் மாற்றிச்சொல்றீங்க, அவ்வளவுதான்.

போதகர்: இல்லை. அப்படிப்பட்ட கதையை நான் அவருக்குச் சொன்னதில்லை.

செல்வின்: அப்போ நோவாவுக்கு ஆண்டவர் தரிசனமாயிற்றாரா. அத்தான் மோசஸைக் கேட்கணும். அவருடைய வீட்டிற்கு யாராவது கிறிஸ்மஸ் அன்று வந்தார்களா இல்லையான்னு.

போதகர்: எதற்கு இதெல்லாம். நோவாவுக்கு ஆண்டவர் தரிசனமானாரோ இல்லையோ. இந்தக் கோயிலிலே பெரும்பாலான மக்கள் வெறும் சடங்காச்சாரத்தைத்தான் நிறைவேற்றுகிறவர்களாயிருக்கிறார்கள், வெறும் மத அனுஷ்டானங்களுக்குத்தான் கட்டுப்பட்டிருக்கிறார்கள் என்ற ஒரு உண்மையாவது தெளிவாகுதல்லவா.

செல்வின்: என்ன தெளிவாகுது. மத அனுஷ்டானங்களிலே நம்பிக்கை இல்லாத ஒரு போதகர் எங்களுக்கு போதகராக வந்திருக்கிறது தெளிவாகுது. (நோவாவிடம்) இதோ சஞ்சீவி வாரார், அவரிடம் உங்க கதையைச் சொல்லுங்க.

(செல்வின் கோயிலுக்குள் போகிறார்.)

போதகர்: இது ஒரு வேடிக்கையான காலம். ஒன்று உண்மை என்று தெரிந்தாலும் மக்கள் உடனே அதை பூரணமாக ஏற்றுக்கொள்ளாத காலம். ஒருசிலவற்றின்மேல் அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கை தவறு என்று அறிந்தாலும் அதை விடாப்பிடியாகப் பிடித்துக்கொள்ளும் காலம்.

(சஞ்சீவி வருகிறார்)

சஞ்சீவி: கோயில் முடிஞ்சுட்டதா? எல்லாரும் போயிட்டாங்களா? (கோயிலுக்குள் எட்டிப் பார்க்கிறார்) ஒருத்தரும் இல்லை தனி ஜெபம் பண்றவங்க! நாங்க இராத்திரி பூராவும் விழிச்சிருந்து ஜெபம் பண்ணினோம். என்ன சந்தோஷம் பிரேஸ்த லார்ட்! (நோவாவிடம்) நாகமணி தெரியுமா? உங்க சொந்தக்கார பையன். கடவுளுக்குள் வாழ்ந்த சகோதரன். இப்போ எங்ககூட்டத்திலே சேர்ந்திருக்கான்.

நோவா: தெரியும். அவனோட வீட்டிலிருந்து சரோவைக் கேட்டு வந்தாங்க. போதகரைக் கேட்கலாம்ன்னு இருக்கேன்.

சஞ்சீவி: கேளுங்க. பையன் உண்மையான கிறிஸ்தவன். நான் சர்ட்டிபிக்கேட் கொடுக்கமுடியும்.

நோவா: ஆனால் பையன் உங்க கூட்டத்திலே சேர்ந்துட்டான். நாங்க சி.எஸ்.ஐ. திருச்சபையைச் சேர்ந்தவங்க. என் பொண்ணு உங்க சபையைச் சேர்ந்த பையனைக் கட்டிக்கிறதிலே பிரச்சினை இருக்கான்னு பாஸ்டரைக் கேட்கிறேன்.

சஞ்சீவி: சரி செய்யுங்க.

(சஞ்சீவி போகிறார். நற்கருணைப் பாத்திரங்களைக் கோயிலிலிருந்து எடுத்துக்கொண்டு வந்த ஜோசப் அவற்றை

வெஸ்ட்ரியில் கொண்டுபோய் வைக்க வெஸ்ட்ரிக்குப் போகிறான்.)

நோவா: சரோவுக்கு கலியாணம் ஆயிட்டா எனக்கு பாரம் குறைஞ்சு போகும்.

போதகர்: ஆமா (இப்போது சத்தமாக) ரூத்! (கூப்பிடுகிறார்)

(சிறிது நேரத்தில் ரூத் வருகிறாள். ஜோசப் வெஸ்ட்ரியிலிருந்து மண்டபத்துக்கு வருகிறான்.)

ரூத், ஒரு கலியாண விஷயம் பேசணும். வாயேன் கோயிலுக்குள் போய் ஜெபம் செஞ்சிட்டு அதைப்பற்றி பேசுவோம். (போதகர், ரூத், நோவா மூவரும் கோயிலுக்குள் போகிறார்கள்.)

மாலி: காத்திருந்தானாம் ஒருத்தன்.

ஜோசப்: என்ன மாலி!

மாலி: திருமண பேச்சு நடக்குது அங்கே (காட்டுகிறார்). சரோவுக்கு திருமணம். உனக்கு தைரியம் வரலையே அவளண்டை பேச. மனதுக்குள்ளே அவளை நினைச்சுக்கிட்டிருந்தால் போதுமா. எப்படி டும், டும் கலியாணம் நடக்கும்.

ஜோசப்: (குளம்பியபடி) என்ன மாலி சொல்றீங்க!

(மனோவும் சரோவும் வருகிறார்கள்)

மனோ: (ஒரு வெடியைக் காட்டியபடி) மாலி, இதை வெடிச்சுக்காட்டுங்களேன். சரோ அக்காவுக்கு வெடிக்க பயமாயிருக்காம்.

(வெடியை மாலியின் கையில் கொடுக்கிறான்)

மாலி: பூ! இது என்ன வெடி. ஜோசப்பிடம் கொடுக்கலாம். ஆனால் அவன் பெரிய பெரிய வெடிகளைத்தான் வெடிப்பான். இப்போகூட அவனுக்காக ஒரு ரொம்ப பெரிய வெடியை தயாரிச்சுக்கிட்டிருக்காங்க ஒரு இடத்திலே. அதையும் இலேசா 'டமார்'ன்னு வெடிச்சுடுவான். அவன் ரொம்ப தைரியசாலி. உனக்குத் தெரியுமா மனோ. அன்னைக்கு ஒரு நாள் ஒரு முரடன் ஒரு நோஞ்சானைப்

போட்டு அடிக்கிறுன் உதைக்கிறுன் ரோட்டிலே. ஒருத் தருக்கும் தைரியமில்லே முரடன் கிட்ட போறதுக்கு. அப்போ எங்கேயோ இருந்து பாஞ்சு வந்தான் பார் ஜோசப். டமார்! ஒரு மோதல் மோதுறுன் முரடன் மேலே விழுகிறுன் முரடன் கீழே! கும்! கும்!ன்னு குத்துவிடுகிறுன் ஜோசப் முரடனுக்கு செத்தேன்! செத்தேன்! ஓடுறுன் முரடன். அவன் பயந்துகொண்டு ஓடின ஓட்டத்தைப் பார்க்கணுமே! அப்படி ஓடுறுன்.

மனே
சரோ } : அப்படியா!

ஜோசப்: வெறும் கதை.

மாலி: அப்படித்தான் சொல்வாங்க பயில்வான்கள்ளாம். நான் குத்துச்சண்டை, மல்யுத்தம் எல்லாம் சொல்லித் தாரேன் இப்போ அவனுக்கு. (சரோவிடம்) நீ லேசா நினேச்சுடாதே அவனே சரோ. அவன் பெரிய பேச்சாளி மேலிட பேச்செல்லாம் பேசக் கற்றுக்கிட்டிருக்கான். அவன் படிச்சவன். 9 வரை படிச்சிருக்கான். இப்போ அவன் சொல்லித்தாரான் பாடம் மற்றவர்களுக்கு (ஜோசப்பிடம்) எத்தனே பேர் படிக்கிறுங்க ஸ்கூலிலே.

ஜோசப்: அஞ்சு பேர். இராப் பாடசாலே. எழுதப்படிக்கத் தெரியாதவங்களுக்கு சொல்லித்தாறேன். போதகர் ஐயாவோட ஏற்பாடு.

மாலி: ரொம்ப அடக்கம்! ரொம்ப அடக்கம்! பேசமாட் டான் அதிகமாக. ஆனுல் உன்கிட்டே தனியாகப் பேச ஆரம்பிச்சுட்டால் பேசுவான், பேசுவான் மணிக்கணக்கில் பேசுவான். நீ கேட்டுக்கிட்டேதான் இருக்கணும் (மனே விடம்) வா மனே! இந்த வெடியெல்லாம் சின்ன வெடி. (வெடியைக் காட்டுகிறுர்) ஜோசப் பெரிய பெரிய வெடி யைத்தான் வெடிப்பான். அதோ பார் தோட்டத்தை, மரங்களும் செடிகளும் நம்மைப் பார்த்து சிரிக்குது. அது களுக்குப் போய் 'குட்மார்னிங்! குட்மார்னிங்!'ன்னு குட் மார்னிங் சொல்லிட்டு, உனக்கு வெடிகளே வெடிச்சுக் காட்டுகிறேன் வா.

(மாலியும் மனேவும் தோட்டத்திற்கு போகிறுர்கள்)

சரோ: என்ன, பிரமாதமாக அளக்கிறுர் உங்களேப்பற்றி மாலி.

ஜோசப்: இப்படித்தான் அவர் சில சமயம் அளந்துவிடுவார் கதையை. (கையைக் காட்டி) அங்கே கோயிலுக்குள் போதகர் அய்யாவும் அம்மாவும் பேசுறுங்க உங்க அப்பா கிட்ட என்ன விஷயம் தெரியுமா? உன் கலியாண விஷயம் பேசுறுங்க.

சரோ: (மிகவும் சாதாரணமாக) உம் அப்படியா அப்புறம்...

(மௌனம் இருவரும் சிறிது நேரம்)

ஜோசப்: (சற்று தயக்கத்துடன்) உங்க ... உங்க வீட்டு கொ ... கொ ... கொல்லேயிலே ஒரு பெரிய வைக்கோற் படப்பு இருக்குதே.

சரோ: உம் இருக்குது.

ஜோசப்: என்னுேட வீட்டுப் பக்கத்திலே நிறைய காலியிடம் இருக்குது.

சரோ: வைக்கோற் படப்புதான் இல்லேயாக்கும்.

ஜோசப்: குருவிகள் தான் பாவம், வைக்கோல் கிடைக்கல்ல. சண்டு சருகை எடுத்துக்கிட்டு வந்து கூடு கட்டப்பார்க்குது என் வீட்டிலே.

சரோ: எங்க வீட்டிலே நிறைய வைக்கோல் இருக்குதுன்னு சொல்லி அனுப்பக்கூடாது அதுங்களுக்கு.

ஜோசப்: என் வீட்டு முற்றத்திலே நிறைய இடமிருக்குது பூந் தோட்டம் போடறதுக்கு.

சரோ: போடுங்க, போடுங்க நான் வாரேன் பூவெல்லாம் பறிச்சுக்கிட.

(மௌனமாகயிருக்கின்றனர் இருவரும் சிறிது நேரம்)

உம் பேசுங்க!

(ரூத் வந்துகொண்டிருப்பது தெரிகிறது)

பேசுங்க! உம் பேசுங்க! (அவசரமாக சொல்லுகிறுள்).

ஜோசப்: அது . . . அது . . .

சரோ: அது! அது! சொல்லுங்க சீக்கிரம் மனதிலுள்ளதை!

(ரூத் வந்து விடுகிறாள்)

ரூத்: சரோ உனக்கு நாகமணி தெரியுமா? (அவள் பதிலுக்கு எதிர்பாராமல் சத்தமாக 'மனோ! மனோ'வென்று கூப்பிடு கிறாள்.) ஜோசப் நீ அய்யாவைக் கூப்பிடுகிறதாகச் சொல்.

(ஜோசப் தயங்கியபடி போகிறான்)

சரோ: எந்த நாகமணி?

ரூத்: சைக்கிள் கடை வச்சிருக்காராமே தொழில் பேட்டை ரோடிலே.

சரோ: பிரதர் நாகமணியா! என்ன அழகா பாடுறார் தெரியுமா அம்மா, அவர்! ரொம்ப நல்லவர். ஆசைகளை யெல்லாம் துறந்தவர். சிஸ்டர்! சிஸ்டர்!ன்னு என்னண்டை ரொம்ப பிரியமா பேசுவார்.

ரூத்: அவருக்கு கலியாணத்துக்கு ஏற்பாடு பண்றாங்களாம் அவங்க வீட்டிலே.

சரோ: அவருக்கா! கடையை மூடிட்டு முழுநேர ஊழியத் துக்குப் போறதாகக் கேள்விப்பட்டேன்!

ரூத்: கலியாணம் பண்றதாயிருந்தால் கடையை மூடுறதில்லை யாம்.

சரோ: கடையை மூடக்கூடாதுதான். அவரை நம்பி அவரோட அப்பா அம்மா இருக்காங்களே.

ரூத்: அவருக்கு ஒரு பெண்மேலே ரொம்ப இஷ்டமாம். கட்டிக் கிறதாயிருந்தால் அவளைத்தான் கட்டிக்கிடுவாராம்.

சரோ: அவளைக் கட்டிக்கல்லன்னு கடையை மூடிட்டு முழு நேர ஊழியத்துக்குப் போயிடுவாராமா?

ரூத்: அவங்க கூட்டத்திலே இதைப்பற்றி ஜெபத்திலே கடவுளைக் கேட்டாங்களாம். கடவுள், நாகமணி ஊழியத் துக்கு வரவேண்டாம். கலியாணம் பண்ணிக்கிட்டு கடையை நடத்திவரட்டும்ன்னு சொல்லிட்டாராம்.

சரோ: அவர் இஷ்டப்படுற பெண்ணையே கட்டிக்கச் சொல் லிட்டாராமா?

ரூத்: பெண்ணை கேட்டுப் பார்க்கச் சொன்னாராம். அது தான் என்னைக் கேட்கச் சொல்லியிருக்காங்க உன்னை.

சரோ: என்னையா! என்னையா? பிரதர் நாகமணி கட்டிக்க நினைக்கிறார்! இல்லே அம்மா இல்லே! கடவுள் அவரை எனக்குக் காட்டலன்னு அவர்கிட்ட சொல்லிடுங்க.

ரூத்: அப்படின்னா, உனக்கு யார்மேலேயும். . .

(சரோ சொல்லத் தயங்குகிறாள். மனோ வருகிறான்)

மனோ: வீட்டுக்குப் போகலாமாம்மா? மரஞ்செடிகளுக் கெல்லாம் மாலி வணக்கம் வணக்கம்ன்னு சொல்லிட்டு வாரார். அதோ பாருங்க (காட்டுகிறான்). நான்கூட அதுங்களுக்கு கிறிஸ்மஸ் வாழ்த்து சொல்லிட்டு வாறேன்.

ரூத்: அப்படியா!

மனோ: துணி டிஸ்ரிபூஷனுக்கு நானும் வாரேம்மா, சரோ அக்கா நீங்களும் வாங்க. முதல்ல வெடியெல்லாம் வெடிக் கனும் வீட்டிலே போய்.

(வாசல் வரை போய் அப்பா! என்று கூப்பிடுகிறான். சில செடிகளை எடுத்துக்கொண்டு வருகிறார் மாலி)

ரூத்: என்ன செடிகளாம்?

மாலி: ஜோசப் வீட்டு முன்னே நடப்போறேம்.

ரூத்: ஜோசப்புக்கு தோட்டம் போடறதிலே இன்டரஸ்டா!

மாலி: தன் வீட்டுக்கு அவனே வெள்ளையடிச்சு வர்ணம் கொடுக்கிறான் தெரியுமா உங்களுக்கு.

ரூத்: அடே பரவாயில்லையே!

மாலி: என்னமோ அம்மா இப்போ ரொம்ப சந்தோஷமா யிருக்கோம். . . இந்த தோட்டத்தை அழிக்கணும்னு செல்வின் ஐயா சொல்லிட்டு வரார். புது பாஸ்ட்ரேட்

கமிட்டியிலே அவரும் வந்துட்டார்ன்னு . . . அதுதான் எனக்கு பயமாயிருக்குது.

(போதகரும் நோவாவும் வருகின்றனர். கோயில் விளக்குகள் அணைந்துகொண்டே வருகின்றன.)

போதகர்: புறப்படலாமா ரூத்? (ரூத் ஏதாவது பேசுவாள் என்று அவளைப் பார்க்கிறார்)

ரூத்: அந்த இடம் சரோவுக்கு விருப்பமில்லையாம்

(சிறிது நேரம் ஒருவரும் பேசவில்லை)

மனோ: (ரூத்திடம்) போகலாம்மா வீட்டுக்கு

(ஒவ்வொருவராக வெளியேறுகிறார்கள்)

[வெளிச்சம் மறைந்து இருள் சூழ்கிறது]

3

[வெளிச்சம் திரும்ப வரும்போது மாலி தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருப்பது தெரிகிறது. வெஸ்ட்ரியிலிருந்து போதகர் மண்டபத்திற்கு வருகிறார்.]

போதகர்: நாட்கள் எவ்வளவு துரிதமாக ஓடுகின்றன! கிறிஸ்மஸிலிருந்து ஆறு வாரங்கள் எவ்வளவு சீக்கிரமாக ஓடிவிட்டன! இருப்பது இன்னும் இரண்டே வாரங்கள் பாஸ்ட்ரேட் கமிற்றி எலெக்ஷனுக்கு.

(வெளியிலிருந்து செல்வின் வருகிறார்)

செல்வின்: தாய்மார் கூட்டம் இன்னும் முடியலையா? மணி 6 ஆகப் போகுது.

போதகர்: முடிஞ்சுட்டுது இப்போ பிரைவேட் டாக் நடத்துறாங்க.

செல்வின்: என்னுடைய ஒய்ப் இன்னும் வீட்டுக்குப் போகலையே? போயிருக்கமாட்டா. வெட்டிப் பேச்சுதான் பேசிக்கிட்டிருப்பா. எலெக்ஷனுக்கு ஓர்க் பண்ணலாமே. நான் எலெக்ஷனில் ஜெயிக்கணுமே என்னோடே சேர்ந்தவங்களும் கமிட்டிக்கு வந்துடணுமே. உ ... உம் அந்தக் கவலையெல்லாம் இல்லை அவளுக்கு. (போதகரிடம்) எனக்காக நீங்க கொஞ்சம் ஓர்க்பண்ணுங்களேன். சுமூகமாக நடக்க வேண்டாமா கமிட்டி? உங்களோட போதனைகளைக் கேட்டுக் கேட்டு நானும்கூட இப்போ கொஞ்சம் மிதவாத டிரெடிஷனிஸ்டா மாறிக்கொண்டிருக்கேன். உங்களுக்கு ஆசை, யார்? யார்? பாஸ்ரேட் கமிட்டிக்கு வரணும்ன்னு இருக்குது?

போதகர்: பெண்கள் நிறையப் பேர் வரட்டுமே கமிட்டிக்கு.

செல்வின்: அவங்களுக்கு தாய்மார் சங்கம் இருக்கு—அதுக்கே ஆபிஸ் பியரராக (bearer) வர்றதுக்கு நான் மாட்டேன் நீ மாட்டேன்னு இருக்காங்க.

போதகர்: வாலிபர்களும் வரணும், அநேகர் கமிட்டிக்கு.

செல்வின்: அவங்களை கண்ட்ரோல்பண்ண யாரால் முடியும்? வாலிபர் சங்கம் இருக்கே. அதிலே ஐக்கியம் இருக்குதா. அதில் வர்றபிரச்சினைகள், அடேயப்பா! அதுதான் இந்தக் கோயிலிலே ஒரு டிரெடிஷன். பாஸ்ரேட் கமிட்டியில் ஆண்கள்தான் பெரும்பாலும் அங்கம் வகிக்கணும், அதிலும் வயது வந்தவங்க, அதிலும் நல்ல குவாலிபிகேஷன், ரிடயர்ட் ஆனவங்க.

போதகர்: ரிடயர்ட் ஆனவங்க இருந்தால் தான் அமைதியாக நடக்கும் கமிட்டின்னு நினைக்கிறீங்க இல்லையா?

செல்வின்: அதிலும் செலக்ஷன் இருக்குது. ரிடயர்ட் ஆனவர்களிலும் சண்டைச் சேவல்கள் கமிட்டிக்கு வந்துட்டா என்ன செய்றது பிடிக்க முடியுமா அவங்களை, பாஞ்சு பாஞ்சு விழுவாங்களே.

போதகர்: அப்போ நீங்க என்ன சொல்றீங்க?

செல்வின்: நான் சொல்ற ஆட்கள் கமிட்டிக்கு வாராப்லே கொஞ்சம் ஒர்க்பண்ணுங்க. போதாத காலம் சபைகளுக்கு இந்தக் காலம். எங்கே பார்த்தாலும் கோயில்களிலே கலகம், சண்டை சச்சரவு. ஓட்டர்களைக்கூட கடத்திட்டுப் போராங்களாம்! அடிதடி கூட நடக்குது கோயில்களிலே! எல்லோரும் புகுந்து விளையாடுமிடம் இப்போ கோயில்கள் தான். இது மாதிரி நடக்க விடக்கூடாது நம்ம கோயில்ல. எனக்கு பெரும்பாலான ஆதரவு இருக்குது. எலெக்ஷனிலே வந்துடுவேன். ஆனால் என்னோட சேர்ந்தவர்களும் கமிட்டிக்கு வரணும். அப்போ தான் பெரிய பெரிய வேலை எல்லாம் செய்ய முடியும், ஏற்கெனவே நான் சொல்லியிருக்கேன் இந்தக் கோயிலை ரினோவேட் (renovate) பண்ணனும். இந்தக் கோயில் வருமானத்தைப் பெருக்க ஒரு பெரிய கட்டிடம் கட்டி வாடகைக்கு விடணும்.

எல்லோரும் பெருமைப்படக்கூடிய அளவில் நம் தோட்டத்தை ஒரு அழகிய பூங்காவாகவும் மாற்றணும்.

(கோயிலிலிருந்து ஜோசப் வருகிறான்)

ஜோசப்: (போதகரிடம்) தாய்மார் உங்களைப் பார்க்கணுமாம். உங்ககிட்ட பேசணுமாம்.

செல்வின்: நான்கூட அவங்ககிட்ட பேசவேண்டியதிருக்குது. (செல்வினும் போதகரும் கோயிலுக்குள் போகிறார்கள். ஜோசப்பைச் சந்திக்க, மாலி தோட்டத்திலிருந்து வருகிறாள்)

மாலி: என்ன ஜோசப் இன்னைக்குப் பூராவும் உம்மணும் மூஞ்சியாயிருக்க.

ஜோசப்: அவள் இன்னைக்கு கோயிலுக்கு வரல்ல. இன்னைக்கு அவளை இதுவரை பார்க்கல்ல.

மாலி: அவள் தான் அந்த சஞ்சீவி கூட்டத்துக்கு போயிட்டிருக்காளே. அந்தக் கூட்டம் அவளை ஒரேயடியாக அங்கே இழுத்துடும்.

ஜோசப்: நான் அவள்கிட்ட சொல்லித்தான் பார்க்கிறேன். ஏதோ சமாதானம் சொல்றாள்.

மாலி: சிக்கல் வரும் ஜோசப்! இப்படியே விட்டுட்டா, நீ இந்த கோயில் செக்ஸ்டன், அவள் அந்தக் கூட்டத்தில் நிரந்தரமாக சேர்ந்துட்டா நீ வேலையை விட்டுப் போக வேண்டியதுதான், அவளைக் கலியாணம் பண்ணணும்ன்னு நினைச்சா . . .

ஜோசப்: என்ன!

மாலி: நீ அவளண்டை சொல்லு எல்லாவற்றையும் எடுத்துச் சொல்லு. இங்கே வாராள் மேன். இப்போ கொஞ்ச நேரத்தில் ஆஸ்பத்திரி விசிட்டுக்கு அவளை கூட்டிற்று போறாங்க அம்மா.

(மனோ கோயிலிலிருந்து ஓடி வருகிறான்.)

மனோ! உனக்கு மிட்டாய் வேணுமா? எனக்கு வேணும், அம்மாவுக்கும் கொடுக்கலாம். சரோ அக்காவுக்கு ரொம்ப

பிரியம். எல்லோருக்கும் ரொம்ப பிரியம். ஜோசப் பூ கூட வாங்கிட்டு வருவான். மிட்டாய் கூட. அவனுக்கு கலியாணம் மனோ. (ஜோசப்பிடம்) போ மேன், பூ வாங்கு, மிட்டாய் வாங்கு, எல்லாம் சொல்லித்தருவாங்க! நீ என்னைக்காவது பூ வாங்கி கொடுத்திருக்கியா, மிட்டாய் வாங்கி கொடுத்திருக்கியா அவளுக்கு? ஓடு மேன் ஓடு!

(ஜோசப் போகிறான்.)

மனோ: மாலி உங்களுக்கு தோட்டம் போடத் தெரியலையாம், உங்களை டிரேயினிங்கு விடணுமாம். சொல்லிக்கிட்டிருக்காங்க.

மாலி: அடே! நான் பிறந்ததிலிருந்தே தோட்ட வேலை பார்த்திருக்கேன். எங்க அப்பா தோட்டக்காரர். எங்க அப்பாவுக்கு அப்பாவுக்கப்பாவுந்தான். நான் ஆசையா வளர்க்கிறேன் மேன். செடிகளைச் சின்ன வயசிலிருந்தே உயிருக்குயிராக வளர்த்துட்டு வாரேன். இதுகளையெல்லாம் எங்கிருந்து எவ்வளவு கஷ்டப்பட்டு கொண்டாந்து வச்சிருக்கேன் தெரியுமா? இதுங்களை வெட்டப் போறாங்களாம். இதுங்களை வெட்றதுக்குப் பதில் என்னை வெட்டட்டும் மேன். என்னை வெட்டட்டும்! இதுங்க என்னோட மரங்கள்!

மனோ: உங்களோட மரங்களில்லை மாலி. கோயிலோட மரங்கள்.

மாலி: கோயில் மரங்கள்தான் என் மரங்கள். இதுங்களை வெட்ட ஆரம்பிச்சா ஓடிப் போயிடுவேன் வேலையை விட்டு

மனோ: அப்புறம் என்ன செய்வீங்க?

மாலி: டீ கடை வைப்பேன். எனக்குப் பலகாரமெல்லாம் செய்யத் தெரியும் நீ வருவியா மேன் என் கடைக்கு?

(ரூத் வருகிறாள்)

ரூத்: மனோ! புல்பிட் பக்கத்திலே ஒரு துணி மூட்டை இருக்குது, எடுத்துட்டு வா.

(மனோ ஓடுகிறான்)

ஜோசப் எங்கே?

மாலி: கடைக்குப் போயிருக்கான். அவன் விஷயத்தைக் கொஞ்சம் கவனியுங்கள்.

ரூத்: கலியாண விஷயந்தானே. அடுத்த மாதம் நடத்திடலாம்ன்னு பார்க்கிறார் அவளோட அப்பா. எல்லா ஏற்பாடுகளும் செஞ்சிக்கிட்டிருக்கார்.

மாலி: ஏற்பாடு செஞ்சிக்கிட்டிருக்கார். ஆனால் அந்த பொண்ணு சஞ்சீவி கூட்டத்துக்கு ரொம்ப மும்முரமாகப் போக ஆரம்பிச்சிருக்குது. நாளானால் அவளுக்கு அதிலே ரொம்ப பிடிப்பு ஏற்பட்டுப் போகும்.

இப்படிப்பட்டதுங்க கடைசியிலே கலியாணம்கூட வேணும், ஊழியத்துக்குப் போகிறேன்னு சொல்லிடுங்க.

ரூத்: சரோ அப்படி எல்லாம் சொல்லமாட்டாள். இதோ அவளே வாராளே. (சத்தமாக) வா சரோ! (கையை அசைக்கிறாள்) அவள் ஏன் இந்த டிரஸ்லே வாராள்! என்ன!

(சரோ வருகிறாள், வெள்ளைப் புடவையும் வெள்ளைச் சட்டையும் அணிந்திருக்கிறாள்.)

இப்போதுதான் கூட்டத்திலிருந்து வாரியா?

(அம்மா! அம்மா என்று கூப்பிட்டுக்கொண்டு கோயிலுக்குள்ளிருந்து ஓடி வருகிறான் மனோ.)
என்னடா அது!

மனோ: எல்லோரும் கூப்பிடுறாங்க, வந்துட்டுப் போகணுமாம்.

ரூத்: இரு சரோ, இதோ வந்துட்டேன்.

(மனோவும் ரூத்தும் போகிறார்கள்.)

மாலி: (சரோவைப் பார்த்து) இதென்ன. இதெல்லாம் வெள்ளை!

சரோ: உங்களுக்குப் பிடிக்கலையா? எனக்குப் பிடிச்சிருக்குது உங்க மேலே எனக்கு ரொம்பக் கவலையாயிருக்குது.

மாலி: எனக்கென்ன!

சரோ: சுருட்டுக் குடிப்பது பாவம் மாலி. நல்ல வேளை அப்பா சுருட்டுக்கூட குடிப்பதில்லை கிறிஸ்மஸிலிருந்து.

மாலி: உங்க கூட்டத்திலே சேரப்போறாரா?

சரோ: இல்லை, மாறிட்டார். இப்போ மோசஸ் மாமாவும் அப்பாவும் எங்க குடியிருப்புக் கோயிலைக் கட்ட திட்டமிட்டிருக்காங்க.

மாலி: ஒரு சிறு சிபாரிசு செய்யேன் உங்க அப்பாகிட்டேயும் மோசஸ் அய்யாகிட்டேயும். அந்தக் கோயிலையொட்டி ஒரு டீ கடை கட்டிக்கிறேன்.

சரோ: கோயில் பக்கத்திலே டீ கடையா!

மாலி: அப்படி எங்கோ ஒரு இடத்திலே இருக்காம். போதகர் ஐயா சொல்லிக்கிட்டிருந்தாங்க. அங்கே டீ குடிக்க வர்றவங்களும் கோயிலுக்குப் போறாங்களாம். மன நிம்மதியில்லாதவர்களும் போறாங்களாம். திரும்பும் போது அநேகமாக மன நிம்மதியோடு திரும்புவார்களாம்.

சரோ: இதெல்லாம் எதுக்கு மாலி, டீ கடை வழியா கோயிலுக்குப் போறது? நமக்கு வேண்டியது நம்மோட ஆத்ம ரட்சிப்பு,

மாலி: உனக்கு கிடைச்சுப் போச்சல்ல. கவலையை விடு. ஒண்ணே ஒண்ணு ஜோசப்பை மட்டும் மறந்துடாதே.

சரோ: சரி. நீங்க சுருட்டுக் குடிக்கிறதை விட்டுடுங்க.

மாலி: சினிமா பார்க்கிறதை?

சரோ: இதைப் படிச்சுப் பாருங்க.

(கையிலிருக்கும் ஒரு துண்டு பிரசுரத்தைக் கொடுக்கிறாள்.)

இச்சை எல்லாப் பாவத்திற்கும் காரணம்.

மாலி: இப்போதான் உன்அண்டை பேசணும். நான் ஆசைக்கு சுருட்டு குடிக்கல்ல, சினிமா பார்க்கல்ல. அநேக

சமயங்களிலே பேச்சுத் துணைக்கு எனக்கு யாரும் இருக்க மாட்டாங்க. அப்போ சுருட்டுக் குடிக்கிறேன். சில சமயங்களில் மனதுக்கு சங்கடமாயிருக்கும் அப்போ சினிமா பார்க்கிறேன். என்னைக்காட்டிலும் மோசமான நிலைமையிலும் அநேகர் இருக்காங்க, தனியாக வாழ்றவங்க, யாராவது தங்களண்டை வந்து பேசமாட்டாங்களான்னு ஏங்கிக்கிட்டிருக்கிறவங்க...அதிகாலையிலே இருந்து சாயந்தரம்வரை ஓய்வு இல்லாமல் முதுகு ஒடிய கஷ்டப்பட்டு வேலை செய்கிறவங்களும் இருக்காங்க. இவங்கள்ளாம் தங்களோட மனசை சாந்திப்படுத்தணும். இவங்க உலகத்தை மறக்கணும். என்ன செய்றாங்க? சிகரெட் குடிக்கிறாங்க, கதை புத்தகங்கள் வாசிக்கிறாங்க, சினிமா பார்க்கிறாங்க. இப்போ நீங்க ஓடி வாரீங்க இவங்களண்டை. இவங்களோட நிலைமையை நினைச்சுப் பார்க்கிறதில்லை. இவங்களுக்கு உங்களோட நட்பையும், அன்பையும், ஆதரவையும் தர்றதில்லை. இவங்களை பாவிங்கன்னு மட்டும் நீங்க பழிக்கிறீங்க. ஆனால் உண்மைக்கும் இவங்க பாவிகளா, நீங்க பாவிகளா?

சரோ: சிகரெட் குடிக்கிறது உடலுக்கு தீங்குதானே. சினிமா பார்க்கிறது மனசைக் கெடுத்துடும். நம் உடலைப் பேணணும். நம்மோட இருதயம் ஆண்டவரின் ஆலயம் அல்லவா?

மாலி: உண்மைதான் நம் இருதயம் கடவுளின் கோயில் தான். ஆனால் ஆண்டவர் சொன்னாரே. ஒருவனுக்குள்ளே போறது அவனைத் தீட்டுப்படுத்தாது. அவனை விட்டு வெளியே வர்றதுதான் அவனைத் தீட்டுப்படுத்தும், அப்படி நமக்கு ஆறறிவு இருக்குது. உணர்ச்சிகள் இருக்குது. சினிமா பார்த்தாத்தான் என்னவாம். காதல் கதை புத்தகங்கள் வாசித்தால்தான் கெட்டுப்போயிடுவாங்களா? உலகத்தில் தானே நாம் நடமாடுறோம். இங்கே அநேக சமயங்களிலே பார்க்கக்கூடாததை, கேட்கக்கூடாததை, தொடக்கூடாததை, சிந்திக்கக்கூடாததை, பார்க்க, கேட்க, தொட, சிந்திக்க நேரிட்டுடுது இப்போ. இதுகளெல்லாம்

மனிதனுக்குள்ளே போகுது. மனசு என்கிற பெரிய பாக்டரி (Factory)க்குப் போகுது. அங்கே எல்லாம் கலவை ஆகி கிரியை செய்யப்பட்டு வெளியே வருது, எப்படி? இச்சையாக, பெருமையாக, பொறாமையாக, கோபமாக இன்னும் என்னென்ன பொல்லாத குணங்கள் இருக்கோ அதெல்லாம். இப்போ இந்த மனசு என்கிற பாக்டிரியிலே கலவையாகி கிரியை நடந்துக்கிட்டிருக்கும்போது நாம் மட்டும் ஆண்டவரோட அன்பை கொஞ்சோண்டு எடுத்து கலந்துட்டோம்னா போதும். இப்போ குணங்கல்லாம் மனிதனிடமிருந்து எப்படி வெளிவரும்? இச்சை, அன்பாக; குரோதம், நட்பாக; பெருமை, தாழ்மையாக; இப்படி கெட்ட குணங்கள்ளாம் நல்ல குணங்களாக மாறி வந்திடுமே.

சரோ: (ஆச்சரியத்துடன்) மாலி! நீங்க இவ்வளவு தூரம்...

மாலி: மேலும் நான் சொல்றேன் கிறிஸ்தவங்களுக்கு. அம்மாமாரே, அய்யாமாரே, நீங்க ஏன் இயற்கையாக, சாதாரணமாக வாழக்கூடாது. ஆண்டவரை மட்டும் பிடிச்சுக்கிட்டு அவர் சொல்றபடி நடந்து வந்தால் போதுமே. இதை உட்டுட்டு எவ்வளவு செயற்கையாக வாழ்றாங்க இந்தக் காலத்திலே ரொம்ப கிறிஸ்தவங்க. வெள்ளைத் துணிதான் கட்டணுமாம்! பூ வச்சால் தோஷமாம்! நகை அணியக்கூடாதாம்! சினிமா பார்க்கக்கூடாதாம்! கதை புத்தகங்கள், சஞ்சிகைகள் உஉம்! தொடக்கூடாதாம்! ஜெபம் பண்ணிக்கிட்டே இருக்கணுமாம், மறுபடியும் பிறக்கணுமாம், அப்போதான் இரட்சிப்பாம். இல்லைன்னா மோட்சத்திற்கு போக முடியாதாம்...அடேயப்பா எவ்வளவு கஷ்டம் கிறிஸ்தவனாக வாழ்றது! இப்போ ஓடிவாராங்க அய்யா ஆண்டவரை புதுசா அறிஞ்சுக்கிட்டவங்க. கிறிஸ்தவங்ககிட்ட ஓடியாராங்க, வந்துட்டேன், வந்துட்டேன்னு ஓடிவாராங்க. இங்கே கிறிஸ்தவங்க, வச்சிருக்கிற தடங்களைப் பார்த்துட்டு ஒரே மலைப்பா மலைச்சுப்போயிடுறாங்க...இப்போ ஓட்டம் எடுக்கிறாங்க இவங்களைவிட்டு, கருணை நிறைந்த முகத்தோடு ‘நீங்கள்ளாம் எங்கிட்ட வாங்க நீங்க எவ்வளவு அழுக்கா இருந்தாலும் நான் ஒத்துக்கிறேன்’ன்னு ஆண்டவர் கையை நீட்டி இவங்களைக் கூப்பிட்டாலும் இந்தக் கிறிஸ்தவங்க வச்சிருக்கிற தடங்கலைப் பார்த்து கிலி பிடிச்சு கிலியிலே ஓட்டம் எடுத்த ஓட்டத்தை மட்டும் அவங்களாலே நிறுத்த முடிகிறதில்லை! அடேயப்பா இந்த தீவிர கிறிஸ்தவங்கள் ஆண்டவருக்கு செய்கிற சேவை! என்ன சேவை! என்ன சேவை!

(ரூத்தும், மனோவும் கோயிலுக்குள் இருந்து வருகிறார்கள். மனோ ஒரு துணி மூட்டையைத் தூக்கிக்கொண்டு வருகிறான். வெஸ்ட்ரியிலிருந்து ஒரு நாற்காலியை எடுத்துக்கொண்டு மண்டபத்திற்கு வருகிறாள் ரூத். மூட்டையை அதன்மேல் வைக்கிறான் மனோ.)

ரூத்: மாலி! தாய்மார்கள் உன்னையும் ஜோசப்பையும் கவனிச்சிட்டே வந்திருக்காங்க.

(ஜோசப் வருகிறான். ஒரு சிறு பொட்டலமும், ஒரு சிறு வாழைத் துணுக்குச் சுற்றும் கையில் வைத்திருக்கிறான்.)

நீங்க இரண்டு பேரும் சரியாக டிரஸ் பண்றதில்லையாம் அவங்களுக்கு வருத்தம். இவ்வளவு பெரிய கோயில் செக்ஸ்டனும், கார்டனரும் நீட்டா டிரஸ் பண்ண வேண்டாமான்னு கேட்கிறாங்க. இதை மிஸிஸ் வில்சன் மாலிக்கு கொடுத்திருக்காங்க.

(மூட்டையிலிருந்து இரண்டு பழைய காக்கி சார்ட்ஸ் (Shorts), சர்ட் (Shirts)களையும் எடுத்து மாலியிடம் காட்டுகிறார்.)

மிஸ்டர் வில்சன் ரிடயர்ட் போலீஸ் அதிகாரி. இந்த சர்ட்டில் ஒரு சிறு கிழிசல் இருக்குது (காட்டுகிறாள்). டார்ண் (Darn) பண்ணிருவேன். சரியில்லைன்னா ஆல்டர் (Alter) பண்ணித்தாரேன் (மாலினியிடம் துணிகளைக் காட்டுகிறாள்). இதை மிஸிஸ் சுந்தரம் ஜோசப்புக்கு கொடுத்திருக்காங்க (ஜோசப்பிடம் ஒரு பேன்டையும் சர்ட்டையும் காட்டுகிறாள்) லண்டனிலிருக்கிற அவங்க

மகன் இங்கே வந்தப்போ வேண்டான்னு போட்டுட்டு போயிட்டாராம். நல்ல துணி, இங்கே கொஞ்சம் சாயம் போயிருக்குது. அவ்வளவுதான். (பேண்டில் சாயம்போன இடத்தைக் காட்டுகிருர்) நீயும் போட்டுப் பார் ஜோசப். சரியில்லேனு ஆல்டர் பண்ணித்தாரேன்.

(ஜோசப்பிடம் கொடுக்கிருள்.)

ஜோசப்: எனக்கு வருத்தமாயிருக்குது.

மாலி: பழைய துணின்னு பார்க்கிறீயா ஜோசப். இதிலே என்ன இருக்கு. காக்கி கால்சட்டை காக்கி சட்டை எனக்கு ரொம்ப பொருத்தம். அதைப் போட்டுட்டு லெப்ட் ரைட்ல வருவேன், சலூட் அடிப்பேன்.

ஜோசப்: ஆனுல், எனக்கு வருத்தமாயிருக்குது.

மாலி: நீ ஏன் வருத்தப்படுற? நீ படிச்சவன். நான் வருத்தப்படமாட்டேன். நான் ஒரு தோட்டக்காரன்.

ரூத்: நீ இப்படி ஃபீல் பண்ணுவேன்னு நினைக்கல்ல ஜோசப்! அவங்களும் அற்பமா நினைச்சு இந்தப் பழைய துணிகளே உனக்குக் கொடுக்கல்ல.

சரோ: (ஜோசப்பிடம்) நீங்க ஏன் வருத்தப்படுறீங்க. எங் கிட்ட கொடுங்க (வாங்கிக்கொள்கிருள்.)

ஜோசப்: உன்னே இந்த டிரஸ்ஸிலே பார்க்கிறதும் சங்கடமா யிருக்குது.

சரோ: உங்களுக்குப் பிடிக்கலேயாக்கும்.

ஜோசப்: நீ அந்தக் கூட்டத்துக்குப் போகவேண்டாம் சரோ.

(சரோவிடமிருந்து பதிலில்லே.)

இந்தாங்கம்மா (கையிலிருந்த தாள் பொட்டலத்தை ரூத்திடம் கொடுக்கிறுன்.)

ரூத்: மிட்டாய்! (எல்லாருக்கும் கொடுக்கிருள்) இதென்ன கையில் பூ!

ஜோசப்: வாங்கினேன் அம்மா.

ரூத்: உனக்குத்தான் வாங்கியிருப்பான் சரோ. வாங்கிக்க.

சரோ: வாங்கிறதைப்பற்றி ஒண்ணுமில்லே (வாங்கிக்கொள் கிருள்) நீங்க வச்சுக்கோங்க (நீட்டுகிருள்).

ரூத்: ஜோசப் உனக்குத்தான் கொண்டாந்திருக்கான். தலே யில் வச்சிக்க.

(சரோ தயங்குகிருள்.)

மாலி: அம்மா நீங்க ஆஸ்பத்திரி விசிட்டுக்குப் போறதாக சொன்னீங்களே, நான் மனேவை வீட்டிலே கொண்டு போய் விட்டுட்டுமா?

ரூத்: சரி மாலி. நானும் ஐயாகிட்டே சொல்லிட்டு வாரணும்.

(ரூத் கோயிலுக்குள் போகிருள்.)

மாலி: வா மனே போகலாம். நான் இந்த டிரஸ்சைப் போட்டு காட்டுகிறேன். லெப்ட் ரைட் போட்டு உனக்கு சலூட் அடிக்கிறேன் (ஜோசப்பிடம்) இனி நீங்க பேசுங்க.

(போகிருர்கள்.)

சரோ: இந்தப் பேண்டையும், சர்ட்டையும் போட உங் களுக்கு இஷ்டமில்லேயானு போடாதேயுங்க. ஆனுல் திரும்ப கொடுத்துடாதேயுங்க வச்சுக்கோங்க.

(துணிகளே ஜோசப்பிடம் கொடுக்கிருள்.)

ஜோசப்: நீ பூ வச்சிக்கக்கூடாதா!

சரோ: இரு மனமாக இருக்கிறேன்.

ஜோசப்: பூவும் நகையுமா நீ இருக்கணும். அதைத்தான் விரும்புகிறேன்.

சரோ: இப்போ என்னேக் கட்டாயப்படுத்தாதேயுங்க.

ஜோசப்: கட்டாயப்படுத்தல்ல. ஆனுல் எனக்கு வருத்தமா யிருக்கு.

சரோ: தலேயிலே வச்சிக்கலென்னு என்ன. இதோ பாருங்க (பூச்சுற்றை தன் நெஞ்சோடு அணேக்கிருள்) அன்பு என் உள்ளத்திலிருக்கிறது.

(போதகரும் ரூத்தும் வந்துகொண்டிருக்கிருர்கள்.)

ஜோசப்: பூ வைக்கிறது தவறுன்னு போதகர் ஐயாகிட்ட கேட்டுப் பார்ப்போம்.

(போதகரும் ரூத்தும் வாசலண்டை நிற்கின்றனர்.)

ரூத்: இப்படியெல்லாம் பேசாதேயுங்க, மிஸ்டர் செல்வின் வளேய வளேய வாரார். நீங்க அவர்கிட்ட கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டாத்தான் என்ன?

(பதில் சொல்லாது யோசித்தபடி முன்னே நடந்து வருகிருர் போதகர்.)

போதகர்: உனக்குத் தெரியுதா ரூத். ஒரு பெரிய கன்வென் ஷன் நடத்துரார் பிரதர் சஞ்சீவி. அதில் சரோ பாடுகிருள்.

ரூத்: அப்படியா சரோ?

போதகர்: பிரதர் நாகமணியும் அவளோடு சேர்ந்து பாடுரு ராம். (ஓரளவு கலவரத்துடன் விழிக்கிருன் ஜோசப்)

சரோ: பிரதர் நாகமணி என்ன அழகா பாடுகிருர். அவர் பாடும்போது என்ன ஆனந்தமாயிருக்குது! நாங்க இரண்டு பேரும் சேர்ந்து பாடும்போது நான் என்னேயே மறந்துடு றேன்.

போதகர்: கன்வென்ஷன் 17ம் தேதிதானே ரூத். அன்னேக் குத்தான் நம் பாஸ்ட்ரேட் கமிட்டி எலக்ஷன் காலேயிலே... மாலேயில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு தேனீர் விருந்து. $6\frac{1}{2}$ மணிக்கெல்லாம் முடிஞ்சுபோகும். $6\frac{3}{4}$ மணிக்குத் தானே கன்வென்ஷன்.

ரூத்: எத்தனே மணிக்கு கன்வென்ஷன்னு உங்களுக்கென்ன.

போதகர்: சரோ பாடுருளே. நாம் கேட்க வேண்டாமா?

ரூத்: அவள் பாடுறதைக் கேட்கப் போய் இங்கே உங்க சபையார்கிட்ட நீங்க பதில் சொல்லியாகணும். எப்படி நீங்க அந்தக் கன்வென்ஷனுக்குப் போகலாம்ன்னு உங்க ளேக் கேள்வி கேட்க ஆரம்பிச்சிடுவாங்க.

போதகர்: அந்தக் கூட்டத்திலே பிரதர் பிரான்சிஸும் பேசுகிருர்.

ரூத்: அவர் ஒரு பவர்புள் ஸ்பீக்கர், எனக்குக் கேட்க ஆசை தான். (கைக்கடியாரத்தைப் பார்த்து) புறப்படு விசிட்டுக்கு, நேரமாகுது. என்ன சரோ, பூவை தலேயில் வச்சிக்காமல் கையிலே வச்சிக்கிட்டிருக்க.

(சரோவிடமிருந்து பதிலுக்குப் பதிலாக புன்னகை மட்டுமே வருகிறது. செல்வின் வருகிருர்.)

போதகர்: நான் உங்கிட்ட தனியாக பேச வேண்டியதிருக்குது. அப்புறம் ஜோசப்! நீ போய் ஆர். எம். கபேயில் இன்னேக்கே ஆர்டர் கொடுத்துடு 17ம் தேதி பார்ட்டிக்கு.

(ஜோசப் போகிருன். அடுத்து ரூத்தும் சரோவும் போகிருர்கள்.)

செல்வின்: எலக்ஷனேப்பற்றிக் கவலேப்படலேயே பாஸ்டர் நீங்க?

போதகர்: அது இருக்கட்டும் மிஸ்டர் செல்வின். அப்புறம் ஹில்டா விஷயம்?

செல்வின்: மிஸ்டர் லாரன்ஸ் எவ்வளவு பெரிய பணக்காரர். அவர் சம்மந்தம் கிடைக்கணுமே. அவரே நேரில் வந்து பெண் கேட்க வந்துட்டார். டில்லியிலிருந்து பறந்து வந்திருக்கார்.

போதகர்: ஆனல் ஹில்டாவுக்கு ஸ்டீபன் மேலேதானே ஆசை. அப்படியே ஸ்டீபனுக்கும் ஹில்டா மேலே உயிர்ன்னு உங்களுக்குத் தெரியுமே.

செல்வின்: கிறிஸ்மஸிலிருந்து அத்தான் மோசஸுக்கு யோக திசைதான். நாடோடி அவர் வீட்டிற்கு வந்து போனதி லிருந்து.

போதகர்: ஏன் நாடோடின்னு சொல்றீங்க.

செல்வின்: யாரோ ஒருத்தர் கிறிஸ்மஸ் அன்றைக்கு வந்திருக் கார் அவர் வீட்டுக்கு. நோவா கோயிலில் பார்த்த ஆளாகவே இருக்கலாம். ஆனல் அத்தான் மோசஸோட

தொழில் அதிலிருந்து ஏறுமுகமாகத்தான் இருக்குது. ஆனுலும் பிரயோஜனம் என்ன இவருக்கு? இன்னும் பத்து தொழிலாளருக்கு வேலே கொடுத்திருக்கார். இதுதான் இவர் வேலே. இப்படித்தான் செய்வார் எல்லாருக்கும் பிரிச்சுக் கொடுத்துவிட்டு இவர் தரித்திரத்தில் தானிருப் பார். இவர் மகன் தகப்பன் கோடு கிழிச்சா அதைத் தாண்டமாட்டான். நல்ல சம்பளம் கிடைக்கும் இவன் வேறு வேலேக்குப் போனுல். மறைமுகமாகச் சொல்லிப் பார்த்துட்டேன். ஹில்டாவை கலியாணம் செய்ய னும்னு இப்படி ஒரு வேலே எடுத்துக்கன்னு. உஹீம்! கேட்டாத்தானே, தகப்பன் சொல்தான் வேத வாக்கு அவனுக்கு. அவரை விட்டுட்டுப் போகமாட்டான். அவ னுடைய வேலேயை விட்டும் போகமாட்டான். இவனுக்குப் போய் எப்படி கொடுக்கிறது என் மகளே சொல்லுங்க?

போதகர்: சிறு வயசிலேயிருந்து உயிருக்கு உயிராகப் பழகி இருக்காங்க இரண்டு பேரும் மிஸ்டர் செல்வின்.

செல்வின்: இந்தக் கவலேயை விடுங்க. எலக்ஷனேப்பற்றி கவலேப்படுங்க. தீவிர டிரெடிஷனிஸ்ட்கள்ளாம் தேர்ந் தெடுக்கப்பட்டுடுவாங்க எலக்ஷன்லேன்னு தெரியுது, தாய்மார்கிட்ட பேசினதிலிருந்து. நான் சொல்றதை கேளுங்க. உங்க கருத்துக்களே உங்க பிரசங்கத்திலே வெளியிடாதேயுங்க, எலக்ஷன் முடியும் வரை. பேசாமல் மனந்திரும்புதலேப்பற்றிப் பேசுங்க. பிரசங்கிமாருடைய பிரசங்கங்களேயும் பாருங்க, எந்தச் சமயத்திலும் இதைத் தான் 'டாப்பிக்'காக வச்சி பேசுவாங்க. எல்லோரும் கேட்டுக் கேட்டு, பிரசங்கம்னு இதுதான்னு முடிவுக்கு வந்த டாப்பிக் இது. மனந்திரும்பலேன்னு எரிநரகத்துக் குப் போவீங்கன்னு சாபம் போடுங்க. அப்போதும் மக்கள் உங்களே எதிர்க்கமாட்டாங்க. ஆகா! என்ன அழகாக போதகர் பிரசங்கம் பண்ணிற்ருர்ன்னுதான் உங்களேயே போற்றுவாங்க. இதை விட்டுட்டு நீங்க என்ன சொல்றீங்க, வேண்டாதெல்லாம் சொல்றீங்க...என்னமோ சொல்லிட் டேன்.

(போகிருர்.)

போதகர்: வேண்டாததைச் சொல்றேனு? டிரெடிஷன் முக்கி யமா? கோட்பாடுகள் முக்கியமா? சம்பிரதாயங்கள் முக்கி யமா? கோயில் முக்கியமா? கிறிஸ்தவக் கூட்டங்கள் முக்கியமா? நான் முக்கியமா? கிறிஸ்தவர்கள் முக்கியமா? இந்தக்கோயில் நடவடிக்கைகள் முக்கியமா? கிறிஸ்தவ கூட்டத்து நடவடிக்கைகள் முக்கியமா? அல்லது ஆண்டவ ரின் விருப்பத்தை நிறைவேற்றுவது முக்கியமா? ஆண்டவ ரின் விருப்பத்தை நிறைவேற்றுவது முக்கியமென்ருல் கிறிஸ்தவனின் வாழ்க்கை, அவனுடைய நடக்கை, அவ னுடைய சிந்தை, அவனுடைய பேச்சு, அவனுடைய அட்டிட்டியூட் (attitude) எல்லாம் ஆண்டவரின் மீட்பின் செய்தியை அறிவிப்பதாக அல்லவா இருக்க வேண்டும். இதைப் பற்றி பேசினுல் வேண்டாத பேச்சா!

(வேதனேயோடு கையை தலேயில் வைக்கிருர்.)

[வெளிச்சம் மறைந்து இருள் சூழ்கிறது.]

4

[வெளிச்சம் திரும்ப வரும்போது நோவா மண்டபத்தில் உட்கார்ந்திருப்பது தெரிகிறது. மண் வெட்டி, கடப்பாரை, வாளி முதலியவற்றை மண்டபத்தின் ஒரு ஓரத்தில் கொண்டு வந்து வைக்கிருர் மாலி.]

நோவா: கோயிலுக்குள்ளே பார் மாலி! எலக்‌ஷனிலே ஜெயிச்சவங்க உட்கார்ந்திருக்காங்க.

மாலி: இருந்துட்டுப் போருங்க. கடப்பாரை, மண்வெட்டி, வாளி எல்லாம் கொண்டு வந்து வச்சுட்டேன். செல்வின் அய்யாவும் வந்துட்டார் காலையில் நடந்த எலக்‌ஷனிலே. இனி என்ன என்னுடை தோட்டத்தை அழிச்சிட்டு வேறு மரஞ்செடிகளை நட்டுட்டுப் போகட்டும்.

நோவா: (எழுந்து நின்றபடி) அவசரப்பட்டு நீ வேலையை விட்டுப் போக வேண்டாம்.

மாலி: இந்த மரங்களை, செடிகளை வெட்டும்போது என்னுல் சகிக்க முடியாது.

நோவா: நாளைக்கு வரப்போறது யாருக்குத் தெரியும். எங்க கோயிலைக் கட்ட முடியாதுன்னு நாங்க நினைச்சுக்கிட்டிருந்தோம். இப்போ பார் மோசஸ் ஒரு கூரைக் கொட்டகை கட்டித் தந்திருக்கார். கூடிய சீக்கிரத்திலே ஒரு பெரிய கோவில் கட்டித்தர ஏற்பாடு பண்ணப்போறதாகச் சொல்லிக்கிட்டுயிருக்கார். அதுதான் நான் சொல்றேன், அவசரப்பட்டு நீ வேலையை விட்டுவிடாதே.

(வெளியிலிருந்து சஞ்சீவி வருகிருர்.)

சஞ்சீவி: சிஸ்டர் சரோவைப் பார்க்க முடியல்லயே!

நோவா: போதகர் ஐயா வீட்டுக்குப் போயிருக்கா.

சஞ்சீவி: இப்போ மணி $5\frac{1}{2}$க்கு மேலாச்சு. $6\frac{3}{4}$ மணிக்கு கன்வென்ஷன் ஆரம்பமாகுதே! இப்போ என்ன செய்றது?

(கோயிலைப் பார்வையிட்டவாறு செல்வின் வருகிருர்.)

செல்வின்: பழங்காலத்து கோயில் மாதிரி இல்லே? இந்த சுவரெல்லாம் இடிச்சுட்டு வேறுவிதமாகக் கட்டணும் (நோவாவிடம் காட்டுகிருர்). என்ன மாலி இது! மண்வெட்டி, கடப்பாரையெல்லாம் வைக்கிறதற்கு மண்டபந்தானு இடம்! கோயிலுக்கு பின்னுலே கொட்டகை இருக்கே அங்கே கொண்டுபோய் வை!

(மாலியும் நோவாவும் அவைகளை எடுத்துக்கொண்டு போகின்றனர்.)

என்ன பிரதர் சஞ்சீவி, என்ன விஷயம் வந்திருக்கீங்க. யாராவது அசைஞ்சுக்கிட்டிருக்காங்களான்னு பார்க்க வந்திருக்கீங்களா?

சஞ்சீவி: இரட்சிக்கப்பட்டவங்களைச் சேர்க்கிறதானே எங்க வேலை. ஆனுல் நான் இப்போ வந்திருக்கிறது வேறு வேலையா. சிஸ்டர் சரோவைத் தேடி வந்திருக்கேன். அவங்க பாடுருங்க கன்வென்ஷனிலே, பிரதர் நாகமணியோடு சேர்ந்து பாடுருங்க. அவங்க பாடக் கேட்டிருக்கீங்களா நீங்க? அற்புதம்! தெய்வீகம்! பாட்டுக்களும் அருள் நிறைந்த பாட்டுக்கள். மனதை உருக்கும் பாட்டுக்கள். கடவுளின் செய்தியை பிரதர் பிரான்சிஸ் கொடுக்கிருர். கல்லையும் கரையவைக்கும் பேச்சு அவர் பேச்சு. எத்தனை பாவிகள் அவரோட பேச்சைக் கேட்டு உள்ளத்திலே குத்தப்பட்டு குலுங்கி குலுங்கி அழுதிருக்காங்க! நீங்களும் வாரீங்களா?

செல்வின்: அழுறதுக்கா!

சஞ்சீவி: கடவுளுக்கு ஸ்தோத்திரம். உங்களோடே பாஸ்டரேட் கமிட்டி தேர்வு, ஒருவருடைய குடும்பியை ஒருவர் பிடிச்சு மல்லுக்கு நில்லாமல் சுமூகமாக முடிஞ்சு போயிருக்குது!

செல்வின்: நீங்க என்ன வாழுதாம். ஒரே எதேச்சதிகாரம். இரண்டு பேர் மூன்று பேர் சேர்ந்துக்கிட்டு நீங்கதான் எல்லாம். எங்களுக்காவது பிஷப் இருக்கார், ஏரியா சேர்மென் இருக்கார், பாஸ்ரேட் சேர்மென் இருக்கார், பல கமிட்டிகள் இருக்குது. உங்களுக்கு...

சஞ்சீவி: கமிட்டிதானிருக்குது, வேறு என்ன இருக்குது உங்களுக்கு (கோயிலுக்குள் எட்டிப் பார்க்கிறார்). அடே உள்ளே கமிட்டிக் கூட்டமா? போதகருக்கு சென்ட் ஆப் (send off) கொடுக்கப் போறதாகக் கேள்விப்பட்டேன் எப்போ?

செல்வின்: எங்க காரியத்தைப்பற்றி நீங்க பேசவேண்டிய தில்லையே.

சஞ்சீவி: முன்னொரு சமயம் உங்க கோயிலைச் சேர்ந்தவன் தானே நான். இது மாதிரி நியூஸ் கேட்க விருப்பமாகத் தானிருக்குது. போதகர் எங்கே காணோம்?

செல்வின்: பிஷப்பைப் பார்க்க போயிருக்கார். அவர் வந்ததும் பாராட்டுக் கூட்டம் நடக்கப்போகுது.

சஞ்சீவி: என்ன! பாராட்டுக் கூட்டமா! அவருக்கா!

செல்வின்: இல்லை, வெற்றி பெற்றவர்களுக்கு. போதகர் ஏற்பாடு. அவர்தான் தன் செலவிலே டீ பார்ட்டியும் கொடுக்கிறார்.

சஞ்சீவி: பெரிய ஆள்தான் உங்க போதகர். எல்லாரையும் நைஸ் பண்ணப் பார்க்கிறாரா இப்போ!

செல்வின்: அப்படி செஞ்சாத்தான் நல்ல காலம் வந்துடுமே அவருக்கு. எவ்வளவு வசதியா இருக்கலாம் எங்க கோயில்ல.

சஞ்சீவி: என்னமோ டீ பார்ட்டி அவர் கொடுக்கிறாரா மாக்கும். சரி, அந்த டீ பார்ட்டி முடிஞ்சதும் அப்படியே தேர்ந்தெடுக்கப்பட்ட அத்தனை அங்கத்தினரும் எங்கள் கன்வென்ஷனுக்கு வாங்களேன்.

செல்வின்: கூட்டோடு அத்தனை பேரையும் அசைக்கப் பார்க்கிறீங்களா! எங்க கோயில்ல ஆள் பிடிச்சது போதும். வேறு கோயிலைப் போய் பாருங்க.

சஞ்சீவி: நீங்க தடுத்தாலும் தடுக்காட்டாலும் ஆவியானவர் அசைக்கத்தக்கதாக பக்குவப்பட்டவங்க எங்களோடுதான் சேருவாங்க.

செல்வின்: நாங்கள் மக்களைப் பக்குவப்படுத்தி வைக்கணும், நீங்க பிடிச்சுட்டுப் போயிடணும். என்ன?

சஞ்சீவி: உங்க போதகர் மட்டும் சும்மா இருக்காரா? ஒரு அருமையான கிறிஸ்தவ சகோதரன். ஜேம்ஸ் அவர் பெயர். நல்ல பிரசங்கம் செய்யக்கூடிய வரம் பெற்றவர். அவரை எங்களை விட்டுப் பிரிச்சிட்டார் உங்க போதகர். அந்தச் சகோதரன் ஜேம்ஸ் மேலே பிரதர்சுக்கும் சிஸ்டர் சுக்கும் ஒரே கவலை. எவ்வளவு மோசமானது அரசியல். சகோதரன் ஜேம்ஸை இதிலே ஈடுபட வச்சுட்டாரே உங்க போதகர்! எவ்வளவு பொல்லாதது உங்க போதகரோட போதனை! ஒரு ஆத்மா கெட்டுப்போச்சுது அவருடைய பேச்சைக் கேட்டு! அந்தச் சகோதரன் ஜேம்ஸ் நித்திய ஜீவனை இழந்து நிற்கிறான்! ஐயோ: உலகம் நோவாவின் காலத்தைப்போல் கெட்டுப்போச்சுதே! ஐயோ! உலகம் சோதோம், கோமோரா பட்டணங்களைக்காட்டிலும் மோசமான நிலையில் இருக்குதே! மக்கள் சோரம் போயிட் டாங்களே. எல்லாம் அழியப்போகுது! எல்லோரும் அழியப்போறாங்க. ஆனால் நாங்க இரட்சிக்கப்பட்டவங்க. கடவுளுக்கு ஸ்தோத்திரம். புதிய வானமும் புதிய பூமியும் காணப்போறோம் நாங்கள். கடவுளுக்கு ஸ்தோத்திரம்! பாவம் உங்க போதகர். அவருக்கு வேதனையின் காலம் வரப்போகுது!

செல்வின்: தீர்க்கத்தரிசனமாக சொல்றீங்களே! அவரை எதிர்க்க கிளம்பி வந்திருக்காங்க புதுக் கமிட்டியிலே தேர்ந் தெடுக்கப்பட்டவங்க,

சஞ்சீவி: தேர்ந்தெடுக்கப்பட்டவங்கதான் வரணுமா எதிர்க்க? இப்போ பாருங்க யூத்துக்கள்கூட எப்படி

நிற்கிறாங்க, கச்சை கட்டிக்கொண்டு. உங்க கோயில்களிலே உங்க சபைகளுக்கு இதிலெல்லாம் ஆசையிருக்கு. ஆனால் இரட்சிக்கப்பட ஆசையிருக்கான்னு கேளுங்கள்! ரொம்ப நிர்ப்பந்தம் உங்க சபையாரோட நிலைமை!

(கார் ஹாரன் சத்தம் கேட்கிறது. சிறிது நேரத்தில் ரூத், சரோ, ஜோசப், மனோ நால்வரும் வருகிறார்கள். அவர்கள் தட்டுகளையும், டீ செட்களையும், பொட்டலங்களையும், அட்டைப் பெட்டிகளையும் தூக்கிக்கொண்டு மண்டபத்தைக் கடந்து வெஸ்ட்ரிக்கு போகிறார்கள். சரோ கலர் தாவணி அணிந்திருக்கிறாள்.)

இந்தப் பெண் சரோ, பிரதர் நாகமணியைக் கலியாணம் செய்தால் எவ்வளவு நல்ல பொருத்தமாயிருக்கும்!

(எல்லோரும் வெஸ்ட்ரியிலிருந்து மண்டபத்துக்கு வருகிறார்கள். சரோ கையில் ஒரு ஜாலராவை வைத்திருக்கிறாள்.)

ரூத்: (ஜோசப்பிடம்)மேசை நாற்காலிகளை எடுத்துப் போடு. டீ பார்ட்டிக்கு அரேன்ஜ் பண்ணு ஜோசப்.

(ஜோசப் வெஸ்ட்ரிக்குப் போகிறான்.)

மனோ: நான் மாலியைப் பார்க்கப் போறேம்மா.

(மனோ போகிறான்.)

செல்வின்: (ரூத்திடம்) மெம்பர்கள் உங்ககிட்ட பேச ஆசைப்படுறாங்க. போதகர் பிஷப்பை பார்க்கப்போனவர் இன்னும் வரல்ல. அவர் வர்றதுக்குள்ளே உங்ககிட்ட சில முக்கியமான விஷயம் பேசணும் அவங்க. இதோ பாருங்க (கோயிலுக்குள் காட்டுகிறார்.) உட்கார்ந்திருக்காங்க.

(செல்வினும் ரூத்தும் கோயிலுக்குள் போகிறார்கள்.)

சஞ்சீவி: (ஓரளவு எரிச்சலுடன்) மணி என்ன ஆச்சு!

சரோ: இப்போ $5\frac{1}{2}$ மணிக்கு மேலாகுது. ஆனால் $6\frac{3}{4}$ மணிக்கு தானே கன்வென்ஷன் ஆரம்பம்.

சஞ்சீவி: அதுக்குள்ளே நாம் செய்யவேண்டிய ஜெபங்கள், விண்ணப்பங்கள் நிறைய இருக்கு.

சரோ: நான் இல்லாமல் ஜெபம் பண்ணிடலாமே நீங்க.

சஞ்சீவி: என்ன சிஸ்டர் சொல்றீங்க. நீங்க $6\frac{3}{4}$ மணிக்கே பாட ஆரம்பிக்கிறீங்க. ஆண்டவர் உங்களுக்கு பெலன் அளிக்க நாம் ஜெபம்பண்ண வேண்டாமா?

சரோ: நான் மனதிலே ஜெபம் பண்ணிக்கிட்டே தானேயிருக்கேன்.

சஞ்சீவி: என்ன மாற்றம் இது சிஸ்டர் உங்களுக்கு! நம்ம கூட்டத்தை விட்டு நீங்க என்ன செஞ்சு கொண்டிருந்தீங்க இவ்வளவுநேரம்?

சரோ: அம்மா பலகாரம் செஞ்சாங்க. என்னுடைய உதவியைக் கேட்டாங்க. அதுக்காக இவ்வளவுநேரம் அங்கே போயிட்டேன்.

சஞ்சீவி: கன்வென்ஷன் இதைக்காட்டிலும் முக்கியமில்லையா?

சரோ: இதுவும் முக்கியந்தானே.

சஞ்சீவி: உடலுக்கு உணவு செய்றது! ஆத்ம ஆகாரந்தான் முக்கியம் சிஸ்டர். எவ்வளவு அழகானது, எவ்வளவு பரிசுத்தமானது நம்ம ஆத்மா. இந்த அழகிய கண்கள், கால்கள், கைகள் எல்லாம் கடவுளுடைய அற்புதப் படைப்பு. ஆனால் இவையெல்லாம் அழியக்கூடியவை, மண்ணிலிருந்து எடுக்கப்பட்டவை. மண்ணுக்குத் திரும்புபவை. ஆனால் ஆன்மா, அழகிலும் அழகு, பரிசுத்தத்திலும் பரிசுத்தமானது, என்றும் விண்ணில் ஆண்டவரோடே வாழப்போறது.

சரோ: ஆனால் போதகர் ஐயா சொல்றாங்க. நம்ம உடலும் விசேஷந்தான். இந்த நம் இதயத்தில் ஆண்டவர் வாசம் பண்றார்.

சஞ்சீவி: உடல் விசேஷமா! அவர் உன்னைக் குழப்புறார்.

சரோ: இல்லை. சிந்தித்துதான் பார்க்கச் சொன்னார். அவருடைய கருத்துக்களை நான் ஏற்கணும்ன்னு வற்புறுத்தல்ல அவர்.

சஞ்சீவி: நீங்க விழுந்து போயிருக்கீங்க சிஸ்டர். நீங்க கலர் புடைவை கட்டியிருக்கீங்க. இதோடேயா கன்வென்ஷனிலே பாடப் போறீங்களா!

சரோ: கலர் புடைவை கட்றது தப்பு இல்லேன்னு நினைக் கிறேன். அவங்களும் நான் கலர் புடைவை கட்டணும்ன்னு ஆசைப்படுறாங்க.

சஞ்சீவி: யாரு? ஜோசப்பா! ஜோசப் கலர் புடைவை விரும்ப லாம். ஆனால் ஆண்டவர் வெள்ளையைத்தான் விரும்புகிறார்.

சரோ: அவங்க விரும்புறதை இப்போ நானும் விரும்புவ தால் கடவுளும் விரும்புவார்.

சஞ்சீவி: என்ன சிஸ்டர் பேசுறீங்க? உளறுகிறீங்க.

சரோ: நியாயத்தைச் சொல்றேன். ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் நேசிக்கணும்ன்னு கடவுள் விரும்பு கிறார். கடவுள்தான் முதல் திருமணத்தை நடத்தி வைத் தார் என்று போதகர் சொல்றார்.

சஞ்சீவி: நிச்சயம் போதகர் உன் மனதைக் கெடுத்துட் டார். கடவுளைக்காட்டிலும் நீங்க மனிதனை அதிகமாக நேசிக்கிறீங்க.

சரோ: தன்னை நேசிப்பதுபோல் மனிதன், மனிதனை நேசிக் கணும்ன்னு சொல்லியிருக்கார் ஆண்டவர். மனிதன் மனிதனை உண்மையாக மனப்பூர்வமாக நேசிக்கும்போது பரலோகம் நமக்குள்ளே இருக்காம்.

சஞ்சீவி: எங்களைவிட்டு விலகிப் போயிட்டீங்க சிஸ்டர். உங்களுக்குத்தான் தெரியும்ங்கற மாதிரி ஏதேதோ பேசு றீங்க. இந்தக் கன்வென்ஷனிலே பங்குபெற முடியாது நீங்க!

சரோ: அப்படிச் சொல்லாதேயுங்க. கன்வென்ஷனிலே பாட எனக்கு ரொம்ப ஆசையாயிருக்கு.

சஞ்சீவி: இந்தக் கலர் புடைவையோடு வந்து பாடமுடியாது. வெள்ளைப் புடைவை கட்டிக்கிட்டுதான் வரணும். அது எங்களோட சட்டம். பழக்க வழக்கம்கூட.

சரோ: அப்போ உங்களுக்குந்தான் பழக்க வழக்கமிருக்குது, சட்டம் இருக்குது. இந்த கோயில்லதான் அதெல்லாம் இருக்கு. உங்களுக்கில்லேன்னீங்க.

(ஜோசப் வருகிறான்)

இந்தா பாருங்க எனக்கு கன்வென்ஷனிலே பாட ஆசையாயிருக்குது. இந்தக் கலர் புடைவையைக் கட்டிக் கிட்டு பாடக்கூடாதாம்.

ஜோசப்: அவங்க சொல்லுவாங்க.

சரோ: நான் பாடப் போறதில்லே.

சஞ்சீவி: பாடப் போறதில்லேயா! (கோபமாக) நீ பாட லேன்னு கன்வென்ஷன் ஒண்ணும் நின்னுபோயிடாது!

(போகிறார்)

சரோ: எனக்குப் பாடணும்ன்னு ஆசையாயிருக்குது. என்றா லும் பரவாயில்லே.

ஜோசப்: உனக்கு பாடலங்கிறது வருத்தமாயிருக்குது? ஏமாற்றமாயிருக்குது. எனக்கு வேறு வருத்தமும், ஏமாற்றமும். உனக்காக என் வீட்டை எப்படி அழகு படுத்தினேன். தோட்டத்தை உண்டுபண்ணினேன்!

சரோ: ஆமா, தெரியும் எனக்கு.

ஜோசப்: இப்போ அந்த வீடு எனக்கில்லையாம். கோயிலுக் குப்பின்னாலே ஒரு பழைய கொட்டகை இருக்கே அங்கே குடியிருக்கச் சொல்றாங்க.

சரோ: அந்த இடமா! பழைய மரம், ஓட்டை உடசலைப் போட்டு வச்சிருக்காங்களே அங்க!

ஜோசப்: என்னோட வீட்டை இடித்து அதிலே பெரிய மாடிக் கட்டிடம் கட்டி வாடகைக்கு விடப்போறாங்களாம். வேலையை விட்டுட வேண்டியதுதான். மாலியும் வேலையை விட தீர்மானித்திட்டார்.

சரோ: இன்னும் சில நாட்கள்தான், நமக்கு கலியாணம் ஆகப்போகிறது. அதுவும் இந்த கோயிலிலேதான் அது

நடக்கப்போகுது. இந்த நேரம் நீங்கள் வேலையை விட முடியுமா? இதையும் நினைத்துப் பாருங்கள். ஒரு குடிசையை சுவரில்லாத மாளிகையாக ஆக்குவதும், ஒரு மாளிகையைக் குட்டிச்சுவராக ஆக்குவதும் ஒரு பெண்ணின் கையில் தான் இருக்கிறதாம். குடும்பத் தலைவியின் கையில்தான் இருக்கிறதாம்.

(செல்வினும் ரூத்தும் மண்டபத்திற்கு வந்து கொண்டிருக்கிறார்கள்)

அந்தப் பழைய கொட்டகையைப் போய்ப் பார்ப்போம் வாருங்க.

(இருவரும் போகிறார்கள். செல்வினும் ரூத்தும் மண்டபத்திற்கு வருகிறார்கள்)

செல்வின்: என்னமோ சொல்லிட்டாங்க, உங்களுக்கு எல்லாம் அவங்க. இது ஆலமரம் போல வளர்ந்த சபை. வாழையடி வாழையாக வந்த சபை. இந்தச் சபைக்கு வர்ற போதகர்கள், சபைக்குத் தக்க தங்களை அட்ஜஸ்ட் பண்ணிக்கணும். இந்தக் கோயிலோட டிரெடிஷன்களை மாற்ற நினைக்கக் கூடாது. போதகர் பாட்டுக்கு ஜெபத்தை நடத்திட்டுப் போகவேண்டியதுதானே. அதுக்கென்று ஜெப புத்தகம் இருக்குது. பிரசங்கங்களும் எல்லாம் வழக்கம்போல செய்ற பிரசங்கங்களைச் செய்யலாம்தான். சௌகரியமாக அஞ்சு வருஷத்தைக் கழிச்சுட்டுப் போயிடலாம் போதகர். சொல்லுங்க அவர் கிட்ட. கொஞ்ச நேரத்துக்குமுன் வந்தீங்களே கார். அது பாஸ்டரோட உபயோகத்துக்குத்தான் வாங்கியிருக்கோம். இது பெரிய சபை. இதிலே அவர் போதகர்னு எவ்வளவு பெருமை அவருக்கு! ஆனால் நாங்க சொல்றதைக் கேட்க மாட்டேன்னு அவர் சொன்னா, மனு எழுதி வச்சிருக்காங்க அவர்மேலே பிஷப்புக்கு கொடுக்க. சொல்லுங்க அவர் கிட்ட இதை.

(மனோ ஓடி வருகிறான்.)

எச்சரிக்கையாக எல்லாம் சொல்லிட்டேன் உங்களுக்கு.

(கோயிலுக்குள் போகிறார்.)

மனோ: அம்மா இதோ அப்பா வாராங்க பாருங்க.

ரூத்: ஆமா.

மனோ: நாம் வந்த கார் நம்மோட கார்தானேம்மா.

ரூத்: இல்லே. கோயிலைச் சேர்ந்தது.

மனோ: அப்பாவுக்காகத்தான் வாங்கியிருக்காங்க.

ரூத்: என்னமோ.

மனோ: இதோ பக்கத்திலே வந்துட்டாங்க. போய் காரைக் காட்டட்டுமா அப்பாவுக்கு.

ரூத்: வேண்டாம். நீ போய் விளையாடு மனோ.

(மனோ போகிறான். சிறிது நேரத்தில் போதகர் வருகிறார்.)

போதகர்: (உற்சாகமாக) ஒரு நல்ல நாள் ரூத் எனக்கு. பிஷப் போட ரொம்ப நேரம் பேச எனக்கு வாய்ப்பு கிடைச்சுது. எல்லாரையும் கூப்பிடுவோமா? டீ பலகாரமெல்லாம் எங்கே?

ரூத்: உங்ககிட்ட பேச இருக்காங்க புதுக் கமிட்டி மெம்பர்கள். தங்கள் கோயிலைப்பற்றி ரொம்ப நினைக்கிறாங்க. உங்க மேலே பயப்படுறாங்க.

போதகர்: பயப்படுறாங்களா? எல்லோருக்கும்தானே கோயில். ஆனால் கடவுளுக்காகக் கோயிலா, கோயிலுக்காகக் கடவுளா?

ரூத்: அவங்க உங்களைப் புரிஞ்சிக்கல்ல. உங்களால் கோயில் பாதிக்கப்படப் போகுதுன்னு நினைக்கிறாங்க.

போதகர்: கோயிலுக்குத்தான் முக்கியம் கொடுக்கிறாங்க ரூத். கடவுளுக்குத்தான் முக்கியம் கொடுக்கணும்.

ரூத்: நீங்க சொல்றதில் நியாயம் இருக்குது. ஆனால் அவங்க புரிஞ்சிக்காமல் உங்களுக்கு விரோதமாக மனு எழுதியிருக்காங்க. பிஷப்புக்கு அனுப்பப் போறாங்க.

போதகர்: அனுப்பட்டும். அதற்கு நாம் என்ன செய்றது.

ரூத்: ஆனுல் நாம் இங்கே கொஞ்சம் சௌகரியமா யிருக்கோம்.

போதகர்: அந்தக் கோணத்தில் பார்க்கவேண்டாம் ரூத். எங்கே எல்லாரும்? (சத்தமாக) மாலி! ஜோசப்! சரோ! மனே! வாங்க! வாங்க! (ரூத்திடம்) எங்கே பலகாரம் டீ. (வெஸ்ட்ரியை எட்டிப் பார்க்கிருர்) இங்கேயா! வேண்டாம்! மண்டபத்திலே அரேன்ஜ் பண்ணலாம்.

(செல்வின் வருகிருர் எழுதின மனுவுடன்.)

செல்வின்: (ரூத்திடம்) எல்லாவற்றையும் சொல்லிற் றீங்களா?

போதகர்: மிஸ்டர் செல்வின், உங்க கோயில் கிறிஸ்தவக் கோயில் தானே. இங்கே கிறிஸ்தவங்க எத்தனேபேர் இருக்காங்க?

செல்வின்: என்ன இப்படி கேட்டுட்டீங்க!

போதகர்: அநேகர் ஒழுங்காக கோயிலுக்கு வாராங்க, அநேகர் தாராளமாகக் காணிக்கை கொடுக்கிருங்க, அநேகர் மிகவும் பக்தியாயிருக்காங்க. ஆனுல் கிறிஸ்தவன் பிறனே நேசிக்கணுமே. அப்படி நேசிக்கிறவர்கள் எத்தனே பேர் இருக்காங்க?

செல்வின்: இல்லேன்னு சொல்ல வாரீங்களா.

போதகர்: அநேகருக்கு பிறர்மீது கன்சர்ன் (concern) இல்லே யேன்னு வருத்தப்படுறேன். உங்க கோயிலுக்கு பல்லாயிரம் ரூபாய் செலவழிக்க நீங்க நினேக்கிறீங்க. ஏழைக் கோயில் மாணிக்க நகர் கோயில். அதற்கு பணம் கொடுத்து உதவ யாருக்குமே மனம் வரலேயே. மாலி, உங்க தோட்டக் காரன். கடந்த முப்பது வருஷங்களுக்கு மேல் உங்க தோட்டக்காரர். தோட்டம்தான் அவருக்கு உயிர். அவர் மேலே ஒரு கன்சிடரேஷனும் (consideration) இல்லாமல் அதை அழிக்க நினேக்கிறீங்க. ஜோசப் உங்க செக்ஸ்டன். அவனுக்கு கலியாணமாகப்போகுது. அவனுக்கு அவன் வீடுதான் மாளிகை. அதை இடிக்கப்போகிறீங்க. அவனேக்

குடியிருக்கச் சொல்ல போறது, கோயில் பின்னுலே ஒரு பழையக் கொட்டகையிலே; ஓட்டை உடசலேயெல்லாம் போட்டு வச்சிருக்கிற கொட்டகையிலே.

செல்வின்: இப்படி ஒவ்வொருவருடைய சௌகரியத்தையும் நினேச்சுக்கிட்டிருந்தால் ஒரு காரியமும் செய்ய முடியாது.

போதகர்: மற்றவர்மீது அக்கறை கொள்றவன்தான் கிறிஸ் தவன் மிஸ்டர் செல்வின்.

(சஞ்சீவி வருகிருர்.)

சஞ்சீவி: எங்களுக்குப் பெரிய தர்மசங்கடம். இப்போ சரோ பாடமாட்டேங்கிறது, ஆளுக்கொரு கேள்வி கேட்கிருங்க அங்கே.

போதகர்: ஏன் பாடமாட்டேங்கிருள்? ரூத்! போ. . . போய் சரோவைப் பாடச்சொல். எல்லோரையும் வரச் சொல்.

(ரூத் போகிருள்.)

பிரதர் சஞ்சீவி உங்க கூட்டத்திலே எத்தனே கிறிஸ்த வங்க இருக்காங்க. ஒரு சிலர்தான் இருப்பாங்கன்னு நினேக்கிறேன்.

சஞ்சீவி: எல்லோருமே கிறிஸ்தவங்கள்தான்.

போதகர்: உங்க கூட்டத்திலே அநேகமாக எல்லோருமே சுய நலவாதிகள்னு நினேக்கிறேன். உங்கள் போதனேகளே சரி யில்லே. தங்களுடைய இரட்சிப்பை பற்றியே எண்ணும்படி மக்களுக்கு நீங்க போதிக்கிறீங்க. ஆக அவர்களெல்லாரும் சுயநலவாதிகளாக்கப்படுருங்க. தன்னுடைய இரட்சிப்பை பற்றியே கவலேப்படுகிறவன் கிறிஸ்தவன் அல்ல!

சஞ்சீவி: ஐயோ! இந்தக் கோயில் வாசல்லேயே இந்த வேதப் புரட்டா!

போதகர்: உண்மையைத்தான் சொல்றேன். கேட்டுக்குப் போறவன்தான் தன் இரட்சிப்பைப்பற்றியே எண்ணிக் கொண்டிருக்கும் கிறிஸ்தவன்.

சஞ்சீவி: ஐயோ தெய்வமே! இது யார் வாயிலிருந்து வருது!

போதகர்: பிரதர் சஞ்சீவி கிறிஸ்தவன் சுயநலவாதியாக இருக்க முடியாதே. நீங்க மட்டும் இரட்சிக்கப்பட்டு நீங்க மட்டும் பரகதியடைய விரும்பலாமா?

சஞ்சீவி: மற்றவங்கமேலே எங்களுக்கு கவலை இருக்கே 'ஆர் யூ சேவ்ட், ஆர் யூ சேவ்ட்' நீங்க இரட்சிக்கப்பட்டீங்களா? நீங்க இரட்சிக்கப்பட்டீங்களான்னு கதறுறோமே கேட்கலையா?

போதகர்: ஆண்டவரை அறியாத மக்களுக்கு அவரைப் பற்றிச் சொல்லுங்க, அவருடைய அன்பைப்பற்றிச் சொல்லுங்க. அவர்களைப் பயப்படுத்தாதேயுங்க. அவங்க ஆண்டவரை ஏற்றுக்கொள்ளாவிட்டா அவங்களுக்கு இரட்சிப்பு இல்லைன்னு எடுத்த எடுப்பிலே சொல்றீங்க. ஆண்டவர் மங்கி எரிகிற திரியை அணைக்காதவர். நெரிந்த நாணலை முறிக்காதவர். அவர் உலக இரட்சகர். எல்லோருக்கும் அவர் சொந்தம். உங்களுக்கு மட்டுமல்ல கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்ல. மேலும் உங்களுடைய 'ஆர் யூ சேவ்ட்' குழப்பத்தைதான் உண்டுபண்றது அநேகருக்கு. ஓரளவு விசுவாசம் உள்ளவன் தன்னையே இரட்சிக்க விரும்புகிறான். சுயநலவாதியாகவும் ஆகிறான். கிறிஸ்தவனுகிறதில்லை. இதுதான் நீங்கள் ஆண்டவருக்கு செய்ற தொண்டு.

சஞ்சீவி: எங்களைத் தாக்கணும்ன்னு நினைக்கிறீங்க. அதுதான் இப்படி பேசுறீங்க.

போதகர்: நீங்களாவது கிறிஸ்தவர்களாயிருக்கக்கூடாதா என்கிற ஆசை எனக்கு.

(வெளியிலிருந்து மற்றவர்கள் வருகிறார்கள்.)

சஞ்சீவி: சிஸ்டர் சரோ! நீங்க கலர் புடவை கட்டி வந்தாலும் பரவாயில்லை. நீங்க கன்வென்ஷன்ல பாடணும்ன்னு எல்லோரும் ஆசைப்படுறாங்க.

போதகர்: ஆறேமுக்காலுக்குத்தானே கன்வென்ஷன் பிரதர் சஞ்சீவி. டீ பார்ட்டியை முடிச்சிட்டு வரட்டுமே சரோ. நீங்களும் இருங்களேன் டீ பார்ட்டிக்கு. ஜோசப்! கோயில்ல இருக்கிற மெம்பர்களை கூப்பிடு.

(ஜோசப் கோயிலுக்குள் போகிறான்.)

வாங்க எல்லோருமாகச் சேர்ந்து மேசை நாற்காலிகளை மண்டபத்திலே ஒழுங்கு பண்ணலாம்.

(தேனீர் விருந்தை மண்டபத்தில் ஒழுங்குபண்ணுகிறார்கள். கோயிலிலிருந்து ஜோசப், தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களுடன் வருகிறான். அங்கத்தினர் 15க்கும் அதிகமானவர்கள். அவர்களின் சராசரி வயது 55க்கு மேலிருக்கும். அதிலும் சிலர் வயது சென்றவர்கள். ஊன்றுகோல்களின் உதவியால் நடப்பவர்கள். அவர்கள் எல்லோரும் மண்டபத்திற்குள் வரவில்லை. வாசலை அடைத்துக்கொண்டு நிற்கின்றனர். வயது சென்ற மூன்று பேர் மட்டும் வாசலைவிட்டு மண்டபத்திற்கு வருகிறார்கள்.)

போதகர்: வாருங்கள், உட்காருங்க.

முதல் அங்கத்தினர்: உட்காரலாம், செல்வின்! நீ மனுவை போதகர்கிட்ட காட்டினியா?

செல்வின்: முதல்ல டீ பார்ட்டியை முடிப்போம்.

இரண்டாம் அங்கத்தினர்: எனக்கு டீ ஒண்ணும் வேண்டாம்ப்பா.

செல்வின்: ஓ! டயட்ல்ல (diet) போட்டிருக்கார்ல்ல டாக்டர் உங்களை.

மூன்றாவது அங்கத்தினர்: பாஸ்டர்! உங்க மேலே வருத்தம் எங்களுக்கு. கோயிலைப் பாதிக்கிற காரியம் ஏன் பேசுறீங்க, செய்றீங்க.

போதகர்: என்ன பாதிக்கிறதாகப் பேசுகிறேன், செய்கிறேன்? சரி அப்படியே பாதிச்சாலும், அந்தப் பாதிப்பினாலே ஏராளமான மக்கள் ஆண்டவரைக் கண்டுகொள்ள முடிஞ்சா, பாதிச்சாத்தான் என்ன? சொல்லுங்க.

முதல் அங்கத்தினர்: பார்த்தீங்களா! இதற்குத்தான் ஈசி சேரைவிட்டு இந்தக் கமிட்டிக்கு வந்திருக்கேன். கோயிலை பாஸ்டர்கிட்ட இருந்து காப்பாற்ற வந்திருக்கேன்.

இரண்டாம் அங்கத்தினர்: அவருக்கென்ன தெரியும். இந்தக் கோயில் எப்போ கட்டினது, எப்படிக் கட்டினது, யார் யார் நின்று கட்டினதுன்னு தெரியுமா?

மூன்றும் அங்கத்தினர்: எனக்குத்தான் காது சரியாகக் கேக்கல்லன்னு நினைச்சேன். சரியாகத்தான் கேட்டிருக்குது. கோயிலை இடிக்கணும் இடிக்கணும்ன்னு பாஸ்டர் சொல்லிக்கிட்டிருந்தது எல்லாம்.

போதகர்: கோயிலை இடிக்கணும்னு சொல்லலையே நான். சுவரில்லாத கோயில் ஆண்டவருக்கு இருக்குது. நம்முடைய கோயிலுக்கு வெளியே அது இருக்குது. அந்தக் கோயில் உலகம் கொள்ளாத ஆலமரம்போலிருக்குது. அதிலே எல்லா மக்களும் வந்து சேருவாங்க. அந்தக் கோயிலைப்பற்றி நமக்கு கவலை இருக்கணும்னுதானே சொன்னேன்.

இரண்டாவது அங்கத்தினர்: ஆலமரக் கோயிலைப்பற்றி நீங்க கவலைப்பட்டது போதும். இந்தக் கோயிலைப்பற்றி கவலை படுங்க.

போதகர்: இந்தக் கோயிலைப்பற்றி கவலைப்பட என்ன இருக்குது. ஆண்டவரை அறியாத மக்களா நீங்க. தினமும் வேதம் வாசிக்கிறீங்க. வாராவாரம் சத்தியத்தைக் கேட்கிறீங்க. இன்னும் நீங்க ஆண்டவரை அறியல்லன்னு நீங்க ஒருபோதும் அறிஞ்சிக்கமாட்டீங்க. ஆண்டவரின் அன்பை மற்றவர்களுக்குக் காட்டமாட்டீங்க. அதுதான் காரணம் உங்களில் கனிகளைக் காணப்படல்ல. உங்களிடம் கனிகளைக் காண மக்கள் ஓடி வாராங்க. ஏமாற்றத்தோடு திரும்பி போறுங்க. லக்ஷக்கணக்கில் பணம் போட்டு அந்தக் கோயிலைக் கட்டி வச்சிருக்கீங்களே ஒரு பத்து கிறிஸ்தவங்களோட மன திருப்திக்காகவா? வாரம் கொஞ்ச நேரம் நீங்க வந்து தொழுதுட்டு மற்ற நேரமெல்லாம் கிறிஸ்தவர்க

ளாக வாழாமலிருக்கிறதற்காகவா? இந்தக் கோயிலால் என்ன பிரயோஜனம்!

முதல் அங்கத்தினர்: கோயிலைப்பற்றிக் கேவலமாக பேசுறீங்க!

கூட்டம்: ஆமா, எங்க கோயில் ஞாபகம் இருக்கட்டும்!

இரண்டாவது அங்கத்தினர்: எல்லோரையும் குழப்ப நினைக்கிறார்!

கூட்டம்: கோயில் இவரை என்ன செஞ்சுது?

மூன்றும் அங்கத்தினர்: ஏன் கோயில்மேலே இவருக்கு கோபம்?

கூட்டம்: கோயில்தான் இவருக்குப் படி அளக்குது!

முதல் அங்கத்தினர்: இவர் யார் எங்க கோயிலைப்பற்றி பேச!

கூட்டம்: எங்க கோயிலாக்கும்!

போதகர்: ஆமா, இது உங்க கோயில். யாருடைய கோயிலுமல்ல உங்க கோயில்! ஆண்டவர் அப்பத்தை எடுத்து, அதைப் பிட்டு சீஷர்களுக்குக் கொடுத்தார். அந்த மீட்பின் செய்தியை நீங்க யாருக்கும் சொல்லவேண்டாம். உங்க கோயிலுள்ளேயே சொல்லிக்கீங்க! அவரை உலக இரட்சகர்ன்னு ஏன் சொல்றீங்க! உங்களுக்கு மட்டும் இரட்சகர்ன்னு சொல்லுங்க! அவருடைய அன்பு உங்களுக்கு மட்டுந்தான்னு சொல்லுங்க! மற்றவர்களுக்கு இல்லைன்னு சொல்லுங்க! இரட்சிப்பும் உங்களுக்கு மட்டுந்தான் மற்றவர்களுக்கு அவசியமில்லைன்னு சொல்லுங்க! உங்க கோயிலை உங்களுக்காகவே வச்சுக்கீங்க! போங்க! பிரதர் சஞ்சீவி உங்க கூட்டத்தை உங்களுக்காகவே வச்சுக்கிடுங்க! போங்க!

ரூத்: ஏன் இந்தக் கோபம் உங்களுக்கு!

போதகர்: கிறிஸ்தவன் தனக்காகத்தான் வாழணுமா ரூத்!

ரூத்: ஏன் இந்தப் பிரச்சினைகள்ளாம் இப்போ. பேச்சை ஆரம்பிச்சா பேசிக்கிட்டே இருக்கலாம். டீ பார்ட்டியை முடிப்போம் முதல்ல.

முதல் அங்கத்தினர்: சீக்கிரம் டீ பார்ட்டியை முடியுங்க. முக்கியமான காரியங்கள்ளாம் பேசவேண்டியதிருக்குது. கோயில் சம்மந்தமான காரியங்கள்.

சஞ்சீவி: எனக்கு நேரமாகுது யாருக்கும் தெரியல்லேயே கன்வென்ஷன் எவ்வளவு முக்கியமானதுன்னு.

போதகர்: என்ன பெரிய டிராஜடி (Tragedy). யாருக்கும் ஆண்டவர் காரியம் முக்கியமாகத் தெரியல்லேயே! என் மதம் முக்கியம். என் கோயில் முக்கியம். என் கூட்டம் முக்கியம். ஆண்டவரின் காரியம் முக்கியமில்லே. ஆண்டவரின் விருப்பத்தை நிறைவேற்றுவது முக்கியமல்ல. மீட்பின் செய்தி மக்களுக்கு அறிவிக்கப்படவேண்டியது முக்கியமல்ல. அவர் கட்டளைகள் முக்கியமில்லே. தன்னைப் போல் பிறனை நேசிப்பது முக்கியமில்லே. ஆனால் உங்க கோயில்தான் முக்கியம். உங்க கூட்டந்தான் முக்கியம். நீங்கதான் முக்கியம். உங்க சொந்த ஆத்ம இரட்சிப்புத் தான் முக்கியம். போங்க வச்சிக்கிங்க.

(சிறிது நேரம் ஒருவரும் பேசவில்லே. யோசிக்கிறார்கள்.)

செல்வின்: பாஸ்டர் ரொம்ப தூரம் நீங்க அங்கலாயிக்கி றீங்க. நீங்க சொல்றதிலே நியாயம் இருக்கத்தான் செய்யுது, நானும் நினைச்சுப் பார்க்க ஆரம்பிச்சிருக்கேன். அதைப்பற்றி பேசணும். பேசுவோம். இப்போ இதோடு நிறுத்திட்டு உங்களுக்குப் பிரியமான பாட்டையே பாடுவோமே. (மற்றவர்களிடம்) பாவம் பாஸ்டர் ரொம்ப வருத்தப்படுறார். டீ பார்ட்டிக்குமுன் அவருக்குப் பிரியமான பாட்டைப் பாடுவோம் நாம் 'தாசரே இத் தரணியை...'

(இந்தப் பாட்டை போதகரைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் பாடுகிறார்கள். போதகர் ஆழ்ந்த யோசனையில் இருக்கிறார்.)

[வெளிச்சம் மறைந்து இருள் சூழ்கிறது.]

5

[ஈஸ்டருக்கு முந்தின தினம். மாலை 6 மணியிருக்கும். வெஸ்டரியிலிருந்து போதகர் மண்டபத்திற்கு வருகிறார். மண்டபத்தில் போடப்பட்டிருக்கும் நாற்காலிகள் ஒன்றில் உட்காருகிறார். ஈஸ்டர் பாட்டுகள் சிலவற்றை யாரோ கோயில் ஆர்கனில் இசைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை சிறிது நேரம் கேட்டுக்கொண்டிருந்த போதகர் எழுந்து நின்று பேச ஆரம்பிக்கிறார். பாட்டுக்களின் ஒலியும் அடங்கிவிடுகிறது.]

போதகர்: ஈஸ்டர் பாட்டுக்களைக் கேட்டீங்களே, எவ்வளவு சீக்கிரமாக ஈஸ்டரும் வந்து விட்டது! நாளை அதிகாலையில் ஈஸ்டர் சர்வீஸ், அதன் பின் ஈஸ்டர் கொண்டாட்டம். ஆனால் யார் ஈஸ்டரை விசேஷமாகக் கொண்டாடுறாங்க? ஆனால் ஈஸ்டர் இல்லாதிருந்தால் கிறிஸ்மசை நாம் கொண்டாடுவதில் அர்த்தம் உண்டா! அப்படியே ஈஸ்டரையும் கிறிஸ்மசையும் கொண்டாடறதில் அர்த்தம் இருக்குமா. நம் ஆண்டவரின் இரண்டாம் வருகையைக் கொண்டாட இப்போதே ஆயத்தமாயிராவிட்டால்! அவர் வரப்போகிறார். இராஜாவாக வரப்போகிறார். நியாயாதிபதியாக வரப்போகிறார், மணாளனாக வரப் போகிறார். நாம் எவ்வளவு ஆயத்தமாக இருக்க வேண்டும்! அவர் வருமுன்னர் உலக மக்கள் அனைவருக்கும் அவர் அறிவிக்கப்படவேண்டும். இதை நமக்கு கட்டளையாகத் தந்துபோயிருக்கார். கடவுள் மீது அன்புவையுங்கள். உங்களை நேசிப்பதுபோல் பிறரை நேசியுங்கள் என்ற கற்பனைகளையும் கொடுத்திருக்கிறார். ஆனால் கிறிஸ்தவர்கள் நாம் அவர் கட்டளையை நிறைவேற்றிக் கொண்டிருக்கோமா? அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளு

கிறோமா? எந்த நிலையில் இருக்கோம்? நம்முடைய வாழ்க்கையைப் பாருங்கள். நாம் கிறிஸ்துவின் அன்பைக் காட்டுகிறவங்களா இருக்கோமா? நம்முடைய கோயில்களையும் கூட்டங்களையும் பாருங்கள். வீம்பும் வைராக்கியமும், சண்டை சச்சரவும், பெருமையும் பொறாமையும், பொருளாசையும் பேராசையும் இவைகளைத் தானே காண்கிறோம்...வெளியே பாருங்க, ஆண்டவர் பசியாயிருக்கார், தாகமாயிருக்கார், ஆடையில்லாமலிருக்கார், வியாதியாயிருக்கார். பற்பல பிரச்சினைகளில் தவித்துக் கொண்டிருக்கார். கிறிஸ்தவன் யார் கண்ணிலும் அவர் படுகிறாரா? பாடுகிறோமே, எப்படி பரவசப்பட்டு அவரைத் துதித்துப்பாடுகிறோம். ஜெபிக்கிறோமே எவ்வளவு நேரம் நெஞ்சு கரைய ஜெபிக்கிறோம். ஆனால் நம் வாழ்க்கையினால் எப்படி அவரை தூஷிக்கிறோம்! எவ்வளவாகத் தூஷிக்கிறோம்.! அவரை நேசிக்கிறோம்ன்னு சொல்றோம். பிறரை நேசிக்கிறதில்லை! அவருக்கு சாட்சியாயிருக்கோம்ன்னு சொல்றோம். ஆனால் மீட்பின் செய்தி உலக மக்களுக்கு அறிவிக்கப்பட நாமே தடையாயிருக்கோம்.! என்ன நிர்பந்தமான நிலைமை நம் நிலைமை!

(கோயில் பின்புறத்திலிருந்து ஒரு ஒட்டடைக் குச்சியுடன் மண்டபத்திற்கு ஏறி வருகிறான் ஜோசப்.)

என்ன ஜோசப் ஒட்டடைக் குச்சியுடன் வருகிறாய்?

ஜோசப்: அங்கே பாருங்க ஐயா (காட்டுகிறான்). அந்தச் சுவரிலிருக்கும் சிலந்திக் கூட்டைப் பாருங்கள். காலையில் தான் ஒட்டடை அடித்தேன்.

(ஒட்டடைக் குச்சியால் ஒட்டடையைப் போக்குகிறான்.)

போதகர்: நம்முடைய உள்ளத்தையும் நாம் அடிக்கடி ஒட்டடை அடிச்சுக்கிட்டே இருக்கோம் இல்லையா ஜோசப். அப்படியும் தன்னயம் உடனுக்குடனாக எப்படி கூடுகளைக் கட்டுது! எங்கே சரோ?

ஜோசப்: தோரணங்களை செஞ்சிக்கிட்டிருந்தா கோயில்லே. இப்பத்தான் வீட்டுக்குப் போயிருக்கா.

போதகர்: அந்தக் கொட்டகையிலே குடியிருக்கிறது உனக்கும் சரோவுக்கும் சங்கடமாகத் தானிருக்கும் ஜோசப். உனக்கு புது வீடு கட்டித்தர சொல்லிக்கிட்டு தானிருக்கேன்.

ஜோசப்: எங்கே கட்டித்தர போறாங்க. பெரியகட்டடத்திற்கு அஸ்திபாரம் போட்டு வேலை நடக்குது. அந்தக் கட்டிடம் கட்டுறதுகே பணமில்லேங்கிறாங்க.

போதகர்: ஆனால் உனக்கு வீடு கட்டித்தருவது ரொம்ப முக்கியம். அவசரம் என்றும் நினைக்க ஆரம்பிச்சிருக்காங்க, சீக்கிரம் கட்டித் தருவாங்க.

ஜோசப்: கொஞ்சம் மனம் மாறியிருக்காங்க. உங்க மேல பிஷப்புக்கு எழுதி வச்சிருந்த மனுவையும் கிழிச்சுப் போட்டுட்டாங்களாமே.

போதகர்: நோவா வந்தாரா சமீபத்தில் வீட்டுக்கு?

ஜோசப்: வந்தார். அடிக்கடி வருவார். சரோவை விட்டு தனியாயிருக்கக் கஷ்டப்படுறார். ஆனால் இப்போ மாணிக்க நகர் குடியிருப்பு கோயிலுக்காக ரொம்ப நேரத்தைச் செலவழிக்கிறாராம். மாலியும் போயிட்டாரே மாணிக்க நகர் குடியிருப்புக்கு.

போதகர்: அதோ வர்றது பிரதர் சஞ்சீவி தானே? (காட்டுகிறார்).

ஜோசப்: அவர் தான். அவரைக் காணவே வெறுப்பாயிருக்குது. எனக்கும் சரோவுக்கும் இப்போ அடிக்கடி வாக்குவாதம், சண்டை எல்லாம் வருது. இதற்கெல்லாம் காரணம் பிரதர் சஞ்சீவிதான்.

போதகர்: அவருடைய கூட்டத்துக்குப்போக வேண்டாம்ன்னு சொல்லிக்கிட்டிருக்க சரோ கிட்ட, ஆனால் அவள் போவேன்கிறாள். அப்படித் தானே?

ஜோசப்: அப்படித் தான். ஆனால் அவள் சொல்ற சமாதானம் வேடிக்கையாயிருக்கு. நம்ம சபையிலிருந்து எத்தனையோ அம்மாமார் அவரோட கூட்டத்துக்குப்

போறதில்லையா, எத்தனே, எத்தனே கூட்டங்களுக்கெல்லாம் போருங்கன்னு சொல்ருள்.

போதகர்: (சிரித்துக் கொண்டு) சரோ மோட்சத்துக்குப் போறது உனக்கு சந்தோஷமாகத் தானே இருக்கணும். ஆனுல் இரண்டு பேரும் சேர்ந்து போனுல் இன்னும் அதிகமான சந்தோஷமாயிருக்குமே!

(பிரதர் சஞ்சீவி வருகிருர்,)

சரோவை கூட்டிற்று வா ஜோசப்.

(ஜோசப் போகிருன்.)

பிரதர் சஞ்சீவி! ஒரு சமயம் உங்க கூட்டத்திலே எத்தனே கிறிஸ்தவங்க இருக்காங்கன்னு கேட்டேன். இப்போ உங்களேயே கேட்கிறேன். நீங்க கிறிஸ்தவரா!

சஞ்சீவி: என்ன அப்படி கேட்டுட்டீங்க! உங்களே நான் திருப்பிக் கேட்டால் நீங்க கிறிஸ்தவரான்னு!

போதகர்: நீங்க தான் எனக்கு இரட்சிப்பே இல்லென்னு சொல்றீங்களே. நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லுங்களேன்.

சஞ்சீவி: நான் உண்மையான கிறிஸ்தவன்.

போதகர்: அப்படியா! அப்போ நீங்க, உங்க அண்டை அயலகத்தார் சந்தோஷமாயிருக்கணும், சமாதானமாயிருக்கணும்ன்னு நினேப்பீங்களே.

சஞ்சீவி: நான் நினேக்கலேயா!

போதகர்: ஜோசப்பும் சரோவும் சந்தோஷமாக வாழட்டுமே

சஞ்சீவி: நான் அவர்கள் சந்தோஷத்தைக் கெடுக்கிறேனு!

போதகர்: உங்க கூட்டத்துக்கு சரோ வர்றதினுலே அவர்களுக்குள்ளே சந்தோஷமில்லே, சமாதானமில்லே. நீங்க சொல்லக் கூடாதா? சரோகிட்ட அவள் உங்க கூட்டத்துக்கு வர வேண்டான்னு.

சஞ்சீவி: நான் சொல்றதா! மெய் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் அடைய வாராங்க சிஸ்டர் சரோ எங்க கூட்டத்துக்கு.

போதகர்: ஆனுல் அங்கே பிரதர் ஜோசப், வேதனேப் படுருனே!

சஞ்சீவி: ஐயோ பாவம்!

போதகர்: நீங்கதான் உலகத்தைவிட்டு தனிச்சு காட்டிலே வாழுற மாதிரி வாழுறீங்க. எல்லோரையும் ஏன் இப்படி வாழச் சொல்றீங்க?

சஞ்சீவி: பரிசுத்தமாக வாழச் சொல்லியிருக்கார் எல்லோரையும் கடவுள்.

போதகர்: எப்படி ஒருவன் இந்தப் பாவ உலகத்திலே பரிபூரண பரிசுத்தத்தில் வாழ முடியும்! கடவுளேயே கேட்க வேண்டிதுதான்.

சஞ்சீவி: ஐயோ! நீங்களா சொல்றீங்க!

போதகர்: நானேதான் சொல்றேன் முடியாதுங்கிறதினுலே சொல்றேன். உதாரணமாக, இதைச் சொல்றேன். நீங்க பதில் சொல்லுங்க. ஒரு குழந்தையைக் கொல்றதுக்காக அதனேத் துரத்திக்கிட்டு ஓடி வருகிருன் ஒருவன்: குழந்தை ஓடிவந்து உங்க வீட்டுக்குள்ளே போய் ஒளிச்சுக்கிடுது. குழந்தை ஒளிஞ்சதைப் பார்த்துட்டீங்க. இப்போ கொலேக்காரன் உங்ககிட்ட வந்து குழந்தையைக் கேட்டால், நீங்க பாக்கவே இல்லேன்னு சத்தியம் பண்ணுவீங்களா, சத்தியம் பண்ணமாட்டீங்களா? இதற்கு மட்டும் பதில் சொல்லுங்க.

சஞ்சீவி: பொய் சொல்லக்கூடாதுதான். இப்படியான இக்கட்டான நிலேக்கு என்னேக் கொண்டுவரமாட்டார் கடவுள்னு நம்புகிறேன்.

போதகர்: நல்லா நம்புறீங்க! உங்களேயே ஏமாற்றிக்கிறீங்க!

சஞ்சீவி: கடவுள் கொலேகாரன் மனதை மாற்றக்கூடும்.

போதகர்: எல்லாம் கடவுள்தான் செய்யணும். ஏனென்றால், நீங்க பரிசுத்தமாக வாழணுமே! பொய் சொல்லக்கூடாதே! பொய் சொன்னால், உங்கள் பரிசுத்தம் கெட்டுப் போகுமே! உங்களுக்கு உலகத்தைப் பற்றி கவலை எதற்கு? மற்றவங்களைப்பற்றிக் கவலை எதற்கு? அவங்க வாழ்க்கையிலே வரும் பிரச்சினைகளைப் பற்றிய கவலை எதற்கு? அவைகள் எப்படிப் பட்ட பயங்கரமான பிரச்சினைகளாகட்டுமே. நீங்க கவலைப் படமாட்டீங்க! உங்க பரிசுத்த வாழ்க்கையை கெடுத்துட மாட்டீங்க! நீங்க பாவியாகிடமாட்டீங்க. (கொஞ்சம் கடுமையான குரலில்) பிரதர் சஞ்சீவி நீங்க கிறிஸ்தவனே இல்லை. உலகத்தைவிட்டு பிரிஞ்சு வாழ நினைக்கிற எவனும் கிறிஸ்தவனே இல்லை! சுயநலக்காரங்க! இப்படிப் பட்ட பரிசுத்தவான்களால் மீட்பின் செய்தி எப்படி உலகத்துக்குள்ளே கொண்டுபோக முடியும். அது எங்கும் போகணுமே. விலைமாதர்களுக்குத்தான் அறிவிக்கப் படணும். என்ன சொல்றீங்க?

சஞ்சீவி: எங்கெல்லாம் எங்களால் போகமுடியலையோ அங்கெல்லாம் பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்ய நாங்கள் விடாது ஜெபிக்கிறோம்.

போதகர்: ஜெபம் தேவை மிகவும் தேவை, எதற்காக? நாம் மட்டும் இரட்சிப்பு அடைவதற்கா? மீட்பரின் அன்பை மக்கள் அனைவரும் அறிந்துகொள்ள எங்கும் பணிபுரியும் ஆண்டவரின் போர்வீரர் அவர்களுக்குத்தான் ஜெபம் அதிகம் தேவை. உலகத்தைக் கண்டு பயப்படும் உங்களைப் போன்றவர்களுக்கு ஜெபம் அவசியமே இல்லை!

சஞ்சீவி: நாங்கள் இரத்தசாட்சிகளாகவும் மரிப்போம் பாஸ்டர்.

போதகர்: ரொம்ப நல்லது, நீங்க மரிக்கிறது!

சஞ்சீவி: இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு கிறிஸ்தவனும் உலகத்தைவிட்டு பிரிந்தே வாழவேண்டியதிருக்கிறது.

போதகர்: அப்போதான் அவங்க மரிக்க முடியும்!

சஞ்சீவி: நீங்க கேலி செய்றீங்க.

போதகர்: இல்லை பிரதர் சஞ்சீவி. ஆச்சரியப்படுறேன். நீங்க எப்படி இவ்வளவு பரிசுத்தமாயிருந்துட்டு பைபிளைத் தொடுறீங்க?

சஞ்சீவி: பைபிளைத் தொடக்கூடாதா, என்ன சொல்றீங்க;!

போதகர்: பைபிளுக்குக் காகிதம் செய்றவங்களெல்லாம் பரிசுத்தவான்களா? பாவிகள். அச்சுக் கோத்தவங்களெல்லாம் பரிசுத்தவான்களா? பாவிகள். அதை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்தவங்களெல்லாம் பரிசுத்தவான்களா? இந்துக்களும் இருந்திருக்காங்க பிரதர் சஞ்சீவி. அப்படிப் பட்ட புத்தகத்தை நீங்கள் எப்படி உங்கள் கையால் தொடலாம்! சிந்தித்துப் பாருங்க. நீங்க இந்த உலகத்திலே பாவிகளோட உதவிகளைத் தேடுறீங்க. ஆனால் நீங்க மட்டும் உலகத்தை விட்டு பிரிஞ்சே வாழுவீங்க! அநியாயமில்லையா இது!

(ஜோசப்பும் சரோவும் வருகின்றனர்.)

சரோ! ஆண்டவரை அறிந்த நீ, அவருடைய அன்பை உணர்ந்த நீ, அவருடைய போதனைகளைக் கேட்ட நீ, அவருடைய கட்டளைகளைத் தெரிந்து வச்சிருக்கிற நீ ஆண்டவரின் அன்பை உன் குடும்ப வாழ்க்கையில் காட்ட வேண்டாமா? ஆனால் நீ என்ன செய்ற? ஜோசப்புக்கு விருப்பமில்லையே பிரதர் சஞ்சீவி கூட்டத்துக்கு நீ போறது! உன் திருமணத்திலே ஜோசப்புக்குக் கீழ்ப்படிவதாகவும் வாக்கு கொடுத்திருக்கல்ல.

சரோ: கீழ்ப்படியக்கூடாதுன்னு இல்லை. ஆனால் பிரதர் சஞ்சீவி கூட்டத்தில் பாட்டுகளும் ஜெபங்களும் உற்சாகமாயிருக்குது.

போதகர்: அப்படியானால் ஜோசப்பையும் கூட்டிற்றுப் போயேன்.

சரோ: அவர்களுக்குத்தான் பிடிக்காதே.

போதகர்: அவனுக்குப் பிடிக்கலைன்னா நீ அங்கே போகாமலிருக்கலாமே. அவனுக்காக உன் ஆசையை விட்டுக் கொடுத்துடக்கூடாதா? உன்னைத்தானே நினைக்கிற

நானும் பார்க்கிறேன் இந்தக் காலத்திலே சரோ. அநேக பெண்கள் தங்களைத்தான் நினைக்கிறாங்க. தங்களோட இரட்சிப்பைப் பற்றித்தான் நினைக்கிறாங்க. தங்களுடைய ஆதாம்களை விட்டுட்டு பற்பல கூட்டங்களுக்குப் போக ஆரம்பிச்சிருக்காங்க. கணவன்மார் நரகத்துக்குப் போனாலும் போகட்டும், தாங்கள் மோட்சத்துக்குப் போகணும். அப்பப்பா! கணவன்மீது என்ன அன்பு பார்த்தியா! ஆனால் ஆதாம் கதை உனக்குத் தெரியுமே சரோ. விலக்கப்பட்ட மரத்தின் கனியைச் சாப்பிட்டு கடவுள் கோபத்துக்கு ஆளாகிறாள் ஏவாள். ஆனால் அந்தக் கனியைச் சாப்பிடாமல் கடவுளின் தண்டனைக்குத் தப்பியிருக்கலாம் ஆதாம். அப்படிச் செய்தானா? இல்லையே. தன் மனைவியின் மீதிருந்த அன்பின் காரணமாக அவள் மட்டும் தண்டனை அடைவதா தானும் அவளுடன் சேர்ந்து தண்டனையடைவேன்னு நினைச்சு அந்தக் கனியைச் சாப்பிட்டிருக்கான் ஆதாம்.

சஞ்சீவி: வேத புத்தகத்தில் இப்படியா எழுதியிருக்குது! ஏவாள் தந்தாள் ஆதாம் புசித்தான் என்றுதானே எழுதியிருக்குது.

போதகர்: அப்படியானால் ஏவாள் தன்னயமானவள், தான் மட்டும் தண்டனையடைவதா ஆதாமும் தண்டனையடையட்டும்ன்று எண்ணி பாதிக் கனியை அவனிடம் கொடுத்தாளா ஏவாள்?

சஞ்சீவி: கடைசிக் காலம் வேதப்புரட்டுகள் நடக்குது!

போதகர்: வேதப்புரட்டா! ஆதாம், ஏவாள் கதை மனிதனின் முதல் பெரும் காதல் கதையல்லவா. ஆதாம், ஏவாளின்மீது இருந்த அன்பின் காரணமாக அவள்மட்டும் தண்டனை அனுபவிக்கக்கூடாது, தானும் தண்டனை அடைய வேண்டுமென்பதற்காகக் கடவுளின் கட்டளையையும் மீறுகிறான். கடவுளையும் பாருங்க, அவரே தம்முடைய பிரமாணத்தை மீறி இருக்கிறார். மனிதனுக்காக இந்த பூமியை சிருஷ்டித்திருக்க, அன்பின் காரணமாக பாவத்திலிருந்த மனிதனை மீட்பதற்காகத் தம் திருக்குமாரனை இந்த பாவ உலகத்துக்கு அனுப்பி இவ்விதமாகத் தம் பிரமாணத்தையே மீறியிருக்கிறார். அவர் சரோ! அன்புக்கு ஈடானது ஒன்றுமே இல்லை எங்கேயும். நீங்கள் இருவரும் ஒருவர்மீது ஒருவர் அன்புள்ளவர்களாகக் கிறிஸ்துவின் அன்பை உங்கள் வாழ்க்கையில் காட்டுகிறவர்களாக வாழுங்கள். இதுவே ஆண்டவருக்குச் செய்யும் தொண்டு. இதுவே ஆண்டவரை ஆராதிக்கும் ஆராதனை. (சிரித்துக்கொண்டே) என்ன சொல்ற சரோ. ஜோசப் நரகத்துக்குப் போகவேண்டியதாயிருந்தால் நீயும் கூட போவாயா?

சரோ: (சிரித்துக்கொண்டே) நிச்சயம் போவேனே!

போதகர்: அப்படியானால் நீங்க பயப்பட வேண்டியதில்லை. ஆண்டவர் அங்கேயும் உங்களோடிருப்பார்! நீங்க இரண்டு பேரும் சந்தோஷமாக வாழணும் சரி, போங்க.

(ஜோசப்பும் சரோவும் போகிறார்கள்.)

சரோவுக்கு, இரட்சிப்புக் கிடைக்காமல் போச்சுங்கிற கவலை உங்களுக்கு இல்லையா பிரதர் சஞ்சீவி? ஆண்டவரை அறிஞ்சுக்கிட்டவங்களைப்பற்றி ஏன் கவலைப்படுறீங்க, கவலைப்படாதேயுங்க. ஆண்டவரை இன்னும் அறியாதிருக்கிற மக்கள் கோடிக்கணக்கிலே இருக்காங்களே. அவங்களைப்பற்றித்தானே அதிகமாகக் கவலைப்படணும். என்ன சொல்றீங்க?

சஞ்சீவி: அவங்களைப்பற்றிக் கவலைப்படவேண்டியது மிகவும் அவசியந்தான். 2000 வருடங்களாகப்போகுது ஆண்டவர் வந்து. இன்னும் அவரை அறியாத மக்கள் இருந்தால் . . .

போதகர்: நாம் தான் காரணம். கிறிஸ்தவத்தை ஒரு மதமாக்கிவிட்டோம்.

சஞ்சீவி: கிறிஸ்தவம் மதமில்லையா!

போதகர்: மதத்துக்கும் அப்பாற்பட்டதுதான். அது அன்பின் மார்க்கம். எல்லா மக்களும் ஒப்புக்கொள்ளக்கூடிய மார்க்கம். கிறிஸ்துவை அன்பின் சொரூபி என்று எல்லோரும் கொள்றதில்லையா, அவரை ஏற்றுக்கொள்றதில்லையா? ஆனால் அவர்கள் கிறிஸ்தவ மதத்தை ஏற்றுக்

கொள்றதில்லே. ஏன்? கிறிஸ்தவங்களிலே கிறிஸ்துவின் அன்பு காணப்படுதா? இம்மையிலே நற்கதி, மறுமையிலே தங்களோட ஆத்மா ஈடேறணும். இதுக்குத்தானே கடவுளே எல்லோரைப்போல வழிபடுறுங்க. அதிஞலே இதுவும் ஒரு மதந்தான் என்று இதைக் குறித்து பிரமாதமாக எண்ணிக் கொள்றதில்லே பிரதர் சஞ்சீவி! ஆண்டவரின் முதற் கற்பனையை எல்லோரும் மிகக் கருத்தாகக் கைக்கொள்ள பிரயாசைப்படுகிறேம் இல்லேயா? நாம் கடவுளே முழுமன தோடு நேசிக்க பழக்குவிக்கப்படுகிறேம். நமக்கும் கடவுளுக்கும் மட்டுமேதான் இந்த உறவு. அதுவும் நம் சொந்த ஆத்ம இரட்சிப்புக்காகத்தான். பிரதர் சஞ்சீவி, நீங்களும் நானும் சரியான மதவாதிகள். கிறிஸ்தவத்தைப் பரப்புகிறவங்க இல்லே. என்ன சொல்றீங்க?

சஞ்சீவி: ஆண்டவரின் இரண்டாம் கற்பனேயையும் கைக் கொள்ளவேண்டுமென்று சொல்ல வாரீங்களா?

போதகர்: முதற் கற்பனேயைக் கைக்கொள்வதுபோல் இரண்டாங் கற்பனேயையும் முழுமனதோடு கைக்கொள் வது மிக மிக அவசியந்தானே. ஆனல் இந்த இரண்டாங் கற்பனேயைக் கைக்கொள்வதில்தான் சிரமம் இருக்குது. பிறனே நேசிக்கனும், நம்முடைய எதிரியையும்கூட. ஆனல் இந்த இரண்டாம் கற்பனேயையும் கருத்தாகக் கைக் கொள்ளப் பிரயாசப்படுகிறவன் தானே கிறிஸ்தவன்.

(ரூத் வருகிறுள்.)

(ரூத்திடம்) ரூத்! வெஸ்ட்ரிக்குப்போய் அந்த இரண்டு மரச்சட்டங்களேயும் எடுத்துட்டுவா.

(ரூத் போகிறுள்.)

பிரதர் சஞ்சீவி, ஆண்டவரின் இரண்டு கற்பனேகளும் ஒன்றுசேரும்போதுதானே கிறிஸ்தவம் பிறக்குது; அன்பின் மார்க்கம் உண்டாகிறது என்று நான் சொல்வது தவறு?

சஞ்சீவி: தவறு அல்ல. உண்மை அதுதான்.

போதகர்: இதைத்தான் திரும்பத் திரும்ப என் சபையார் கிட்ட சொல்லிக்கிட்டு வாரேன். ஆனலும் அவர்களுக்கு

கிறிஸ்தவம் ஒரு மதம் என்ற எண்ணந்தான் மேலோங்கி யிருக்கிறது.

(சஞ்சீவி யோசிக்கிருர்)

என்ன யோசிக்கிறீங்க. கிறிஸ்தவ மக்கள் அன்பில் அதிக மாக வளரணும் இல்லேயா?

சஞ்சீவி: அவசியந்தான்.

போதகர்: அதிலும் இந்தக் காலத்தில் எத்தனேயோ வித மான பிரச்சினேகளேச் சந்திக்கிருங்க மக்கள். மிகவும் சிக்க லான பிரச்சினேகளில் சிக்கித் தவிப்பவர்களும் இருக்காங்க. அவர்களுக்கு உதவவேணுமானல் நம்முடைய கிறிஸ்தவ அன்பும் எவ்வளவோ ஆழமாக, எவ்வளவோ அகலமாக, எவ்வளவோ உயரமாக வளரவேண்டியதிருக்குது!

(வெஸ்ட்ரியிலிருந்து இரண்டு மரச்சட்டங்களேயும் எடுத்துக்கொண்டு வருகிருள் ரூத். அந்த மரச்சட்டங்களில் ஒன்று நீளமாகவும் மற்றது குட்டையாகவுமிருக்கிறது.)

பிரதர் சஞ்சீவி! கிறிஸ்தவனின் அடையாளம் இது தானே (ரூத்தின் கையிலிருக்கும் இரு மரச்சட்டங்களேயும் சிலுவை யாக்கிக் காட்டுகிருர்). இவை தனிப்படும்போது (சட்டங் களேத் தனித் தனியே தரையில் குத்தர நிறுத்துகிருர்) இந்தச் சின்னக் கட்டையைப் பாருங்க அது. நம்மைக் குறிக் கின்றதாக எண்ணிக்கிங்க. அதாவது நான் 'ஐ' (I) இப் போது இந்த நீண்ட கட்டையைப் பாருங்க. இது கடவுளேக் குறிப்பதாக எண்ணிக்கிங்க. இரண்டும் உறவுகொள்வதே மதம். இப்படியாக (இரண்டு கட்டைகளேயும் சேர்த்துக் காட்டுகிருர்) ஆனல் மூன்ருவது ஆளுக்கு இடமில்லே. நானும் என் கடவுளும் அவ்வளவே. ஆனல் கிறிஸ்தவத் தில் பிறன் ஒருவனுக்கும் இடமுண்டு. 'நான்' என்ற இந்தச் சின்னக்கட்டை இப்படியாக மாறவேண்டும் (சின்ன கட்டையைப் படுக்கை வசத்தில் காட்டுகிருர்). எனக்கு என்னேப்பற்றியும் பிறரைப்பற்றியும் அக்கறையும்வேண்டும் கடவுளுடனும் சேர்ந்து இருக்கணும் இப்படியாக (சிலுவை யாக்கிக் காட்டுகிருர்) நீங்க என்ன சொல்றீங்க?

(சஞ்சீவி பதில் சொல்லவில்லை யோசிக்கிறுர்.)

ஆனுல் ஒருவன் கிறிஸ்தவனுக மாறுவது இலேசான காரியமா? சொல்லுங்க! கடவுள் நமக்கு பெலன் அருள வேண்டும். நாமும் அதிகமாகப் பிரயாசப்படவேண்டும். தூய ஆவியானவர் நம்மை வழிநடத்தவேண்டும்.

(சஞ்சீவி யோசித்துக்கொண்டேயிருக்கிறுர்.)

ரூத் அப்புறம் ஸ்டீபன் ஹில்டா விஷயம்?

ரூத்: சொல்றதுக்கு வேறென்ன இருக்குது. ஹில்டா இப்படி மனம் மாறினதைப்பற்றி ஆச்சரியப்படுறுங்க எல்லோரும்.

போதகர்: ஹில்டா தன்னைக் கலியாணம் பண்ணிக்கப் போறுன்னு எப்படி அவளை உயிருக்குயிராக நேசிச்சான் ஸ்டீபன்!

சஞ்சீவி: ஹில்டா ஸ்டீபனைக் கட்டிக்கப் போறதில்லையா!

ரூத்: பெண் கேட்க வந்திருக்காங்க ஹில்டாவை ஒரு கோடீஸ்வரன் வீட்டிலிருந்து. அந்த கோடீஸ்வரனைக் கட்டிக்க சம்மதம் கொடுத்துட்டா ஹில்டா.

சஞ்சீவி: நம்பவே முடியவில்லையே!

ரூத்: பையன் உலகஞ் சுற்றப் போயிருக்கானும். அநேகமாக கிறிஸ்மஸ்க்கு 4, 5 வாரத்துக்குமுன் திரும்பிவந்துடுவானும். அப்போ கலியாணம் இருக்கும்ன்னு சொல்லிக்கிட்டாங்க.

போதகர்: கிறிஸ்மஸ்க்கு 4, 5 வாரத்துக்குமுன்! அட்வென்ட் (advent) சமயம் ஆண்டவரின் இரண்டாம் வருகையை நினைத்துக் கொண்டாடும் சமயம், இந்தக் கலியாணம் நடக்கப்போகுது! ஆண்டவரும் மணுளனுக வரப்போகிறுர். நம் சபையைச் சந்திக்க வரப்போகிறுர். ஞான மணவாட்டியாக அவருடைய சபையும் தன்னை அன்பினுல் அலங்கரித்துக்கொண்டு ஆண்டவருக்காகக் காத்திருக்க வேண்டுமே!

சஞ்சீவி: ஹில்டாவுக்கும் நீங்கள் புத்தி சொல்லக்கூடாதா? ஸ்டீபனை இத்தனை காலமாகக் காதலித்துவிட்டு கடைசியில் அவனைக் கைவிடுவதென்றுல் . . .

போதகர்: கிறிஸ்தவர்களுக்குத்தான் புத்தி சொல்லவேண்டியதிருக்குது. அவர்களும் ஆண்டவரின் அன்பை நினையாதிருக்கிறுர்களே.

சஞ்சீவி: ஒரு சமயம் காட்டாற்று வெள்ளத்திலே அடித்துச் செல்லப்பட்டிருக்கிறுள் ஹில்டா. அவளை ஸ்டீபன் காப்பாற்றியிருக்கான். இப்போ நன்றி கெட்டுப்போய் அவனை விட்டுவிட்டு கோடீஸ்வரனைத் திருமணம் செய்யப் போறுளாமா!

போதகர்: கிறிஸ்தவர்களாகிய நமக்கும் நன்றியிருக்கிறதா? பாவத்தின் சம்பளம் மரணம். அந்த மரணத்தினின்றும் தம் உயிரைத் தந்து நம்மை மீட்டுக்கொண்ட ஆண்டவரை மறந்து மெட்டீரியலிசத்தின்மீது மோகம்கொண்டு திரிகிறேமே. அவரை நேசிக்கிறேம் என்று சொல்லுகிறவர்களும் பிறரை நேசிக்கிறுர்களா? மீட்கப்பட்டோம் என்று சொல்லுகிறவர்களுக்கும் பிறர்மீது அக்கறை இருக்கிறதா. அவருக்காகப் பரிசுத்தமாக வாழுகிறேம் என்று சொல்லுகிறவர்களும் ஆண்டவரின் இரண்டாம் கற்பனையைக் கைக்கொள்ள மனமுள்ளவர்களாயிருக்கிறுர்களா? காணக்கூடிய சகோதரனை நேசிக்க முடியாதவன், காணக்கூடாத கடவுளை எப்படி நேசிக்க முடியும்? இது ஆண்டவர் கேட்ட கேள்வி. ஆனுல் இந்தக் காலத்தில் யார் பிரசங்கம் பண்ணட்டும், கிறிஸ்தவன் கிறிஸ்தவனுக வாழவேண்டும் என்று போதிக்கிறுர்களா? ஆண்டவரின் இரண்டாம் கற்பனையைப்பற்றி பேசுகிறுர்களா? உஹூம்! கிடையாது! ஆனுல் ஆண்டவரின் இரண்டு கற்பனைகளும் ஒன்று சேரும் போதே கிறிஸ்தவம் பிறக்கிறது. மீட்பின் செய்தியும் உலகெங்கும் செல்லுகிறது. இதை நினைத்துப் பாருங்கள்.

—வெளிச்சம் மறைகிறது—

6

[ஆண்டவரின் இரண்டாம் வருகையின் ஞாயிற்றுக்கிழமை காலை 8·30 மணி அட்வென்ட் பாட்டுகள் சிலவற்றை யாரோ ஆர்கனில் இசைத்துக்கொண்டிருக்கிறார்கள். வெஸ்ட்ரியிலிருந்து போதகர் மண்டபத்திற்கு வருகிறார். பாட்டுகளின் ஒலியும் அடங்கிவிடுகிறது.]

போதகர்: கடைசியாக ஆண்டவரின் வருகையின் காலத்திற்கு வந்துவிட்டோம். அவருடைய வருகையை நினைத்து ஆராதிக்கப்படும் முதல் அட்வென்ட் ஞாயிற்றுக்கிழமை. ஆராதனை இன்னும் சிறிது நேரத்தில் ஆரம்பமாகப் போகிறது. கணக்குப் பார்க்க ஆரம்பித்துவிட்டார்களா கிறிஸ்தவர்கள்? திரும்பவும் ஞாபகப்படுத்துகிறேன்... அந்த இரண்டாம் கற்பனை.

(கையை உயர்த்தி ஆசீர்வதித்துவிட்டு வெஸ்ட்ரிக்குப் போகிறார் போதகர். சிறிது நேரத்தில் செல்வின் வருகிறார் அவரைத் தொடர்ந்து மூன்று அங்கத்தினரும் வருகிறார்கள்.)

செல்வின்: ஆம், ஹில்டாவே என்னிடம் வந்து 'அப்பா, இந்தக் கிறிஸ்தவ சமுதாயத்தைப்பற்றி பல நாட்கள் சிந்தித்து என் மனச்சாட்சியின்படி நான் ஸ்டீபனை மணப்பதற்கு முடிவு செய்துவிட்டேன். ஆதலால் கோடீஸ்வரன் திருமணத் தொடர்பை விட்டுவிடுங்கள் என்று சொல்லிவிட்டாள்.

மூன்று அங்கத்தினரும்: அப்படியா!

செல்வின்: போதகரின் அறிவுரைகள் என்னையும் சிந்திக்க வைக்கிறது. ஐசுவரியம் ஐசுவரியத்தைப் பிறப்பிக்கும் ஜீவனைப் பிறப்பிக்காது. ஆண்டவரின் இரண்டாம் கற்பனை

யும், அவருடைய முதலாம் கற்பனையைப்போல் கருத்தாகக் கைக்கொள்ளும்போது பேரன்பு உள்ளத்தில் பிறக்கிறது. ஜீவாதிபதியாகிய ஆண்டவருக்கு உரியவர் ஆகிறோம். நீங்க என்ன நினைக்கிறீங்க?

(மூவரும் சிந்திக்கிறார்கள். கோயில் மணி அடிக்கிறது. அவர்கள் நால்வரும் கோயிலுக்குள் செல்லுகிறார்கள். அவர்களைத் தொடர்ந்து வெளியிலிருந்து வரும் ரூத், சரோ, மனோ மூவரும் உள்ளே போகிறார்கள். அதன்பின் நோவா, மோசஸ், மாலி இவர்கள் செல்லுகிறார்கள். மணி அடித்து ஓய்ந்தது. ஜோசப் கோயிலுக்குள் செல்லுகிறான். கடைசியாக வெஸ்ட்ரியிலிருந்து போதகர் கோயிலுக்குள் போகிறார். அட்வென்ட் பாட்டு ஒன்றை சபையார் பாடுகிறார்கள். சிறிது நேரத்தில் 'சபையின் அஸ்திபாரம்' பாட்டு பாடப்படுகிறது.

—திரை—

முதலாம் கற்பனை

. . . உன் தேவனுகிய கர்த்தரிடத்தில் . . . அன்பு கூருவாயாக.

இரண்டாம் கற்பனை

. . . உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக. —மாற்கு 12:30,31

. . . பசியாயிருந்தேன், எனக்கு ஆகாரம் தந்தீர்கள். தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள். ஆடையில்லாமல் இருந்தேன், எனக்கு ஆடை அளித்தீர்கள்; வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலிலிருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள்.

. . . மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் . . . —மத். 25:24—45

—இயேசு

ANTHA ERANDAM KARPANAI

By S. PONRATHINAM

விலை ரூ. 12·00 (இந்தியாவில் மட்டும்)